**அல்லாஹ்வின் கட்டளை**

رَبَّنَآ اِنَّكَ تَعۡلَمُ مَا نُخۡفِىۡ وَمَا نُعۡلِنُ‌ؕ وَمَا يَخۡفٰى عَلَى اللّٰهِ مِنۡ شَىۡءٍ فِى الۡاَرۡضِ وَلَا فِى السَّمَآءِ○

பொருள்:
எங்கள் இறைவா! நாங்கள் மறைத்து வைப்பவற்றையும் நாங்கள் வெளிப்படுத்துபவற்றையும் நிச்சயமாக நீ அறிகின்றாய். பூமியிலும், வானத்திலும் எப்பொருளும் அல்லாஹ்வை விட்டும் மறைந்ததாக இல்லை.

(இப்ராஹீம்: 39)

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ نَحۡمَدُهٗ وَنُصَلِّيۡ عَلٰى رَسُوۡلِهِ الۡكَرِيۡمِ وَعَلٰى عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 9

இதழ் 40

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly

# BADAR Qadian

Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - ரபீயுல் அவ்வல் 23 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - அகாஃ 03 ★ 2024 அக்டோபர் 03


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## மஸீஹே மவ்வூதுடைய ஜமாத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டு ஸஹாபிகளின் ஜமாஅத்துடன் இணைவதற்கு விருப்பம் கொண்டுள்ள நீங்கள் உங்களிடத்தில் ஸஹாபிகளின் பண்பை உருவாக்கிக் கொள்ளுங்கள் நான் இறைவன் புறமிருந்து தோன்றியவராக இல்லாமல் இருந்திருந்தால் பின்னர் இந்த அளவிற்கு ஏச்சுப் பேச்சுகளையும் இந்த அளவிற்கு கூச்சல்களையும் தீங்குகளையும் துன்பங்களையும் என் மீது சுமப்பதற்கு எனக்கு என்ன அவசியம் வந்து விட்டது? என்பதை நீங்களே கூறுங்கள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உருவத்திலும், வடிவத்திலும் நம்பிக்கை கொள்வதற்கான ஒளியை இறைவன் நிரப்பியுள்ளான். மேலும், கம்பீரமான மற்றும் அழகான வடிவங்களை அன்னார் (ஸல்) கொண்டிருந்தார்கள். அதிலேயே ஓர் ஈர்ப்பும், ஆற்றலும் இருந்தது. அதாவது அவை உள்ளங்களை தன் பக்கம் கவர்ந்து இழுத்து வந்தன. மேலும் அன்னாரின் ஜமாஅத் தூதருக்குக் கட்டுப்படுவதில் எப்படிப்பட்ட முன்மாதிரியைக் காட்டியது என்றால், மேலும் உறுதிப்பாட்டில் எப்படிப்பட்ட அற்புதங்கள் நிரூபணமாகின என்றால், எவர் அதனைக் கண்டு வந்தாரோ அவர் தன்னையுமறியாமல் அன்னாரின் பக்கம் ஈர்க்கப்பட்டார்.

சுருக்கமாக, ஸஹாபிகளைப் போன்ற நிலைக்கும், ஒற்றுமைக்கான தேவையும் தற்போதும் இருக்கின்றது. ஏனெனில், அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கரங்களால் தயார் ஆகிக் கொண்டிருக்கின்ற இந்த ஜமாஅத்தை இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தயார் செய்த அந்த ஜமாஅத்துடன் இணைத்திருக்கின்றான். மேலும், ஜமாஅத்தின் முன்னேற்றம் என்பது அதுபோன்ற மக்களின் முன்மாதிரிகளாலேயே நிகழ்கின்றது. மஸீஹே மவ்வூதுடைய ஜமாத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டு ஸஹாபிகளின் ஜமாஅத்துடன் இணைவதற்கு விருப்பம் கொண்டுள்ள நீங்கள் உங்களிடத்தில் ஸஹாபிகளின் வடிவத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்; அவர்களைப் போன்று கட்டுப்படுங்கள்; அவர்களைப் போன்று பரஸ்பர அன்பும், சகோதரத்துவமும் கொள்ளுங்கள்.

சுருக்கமாக, ஒவ்வொரு வடிவிலும், ஒவ்வொரு நிலையிலும், ஸஹாபிகளின் வடிவத்தையே மேற்கொள்ளுங்கள். எவர்கள் நமது எதிர்ப்பாளர்களாக மாறி நம்மை

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்....

## எந்த நபர் குர்பானி கொடுக்கின்றாரோ அவர் ஒருவகையில் இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றார். அதாவது நான் வல்ல இறைவனின் வழியில் எல்லாவற்றையும் தியாகம் செய்வேன் என்பதை வெளிப்படுத்துகிறார். எந்த நபர் ஆட்டை குர்பானி செய்வதுடன் தனது நஃப்ஸையும் குர்பானி செய்கின்றாரோ அவர் கண்ணியம் மிக்க நபர்களின் பார்வையில் கண்ணியத்திற்குரியவர் ஆவார்

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல் ஹஜ்ஜின் வசனம் 38-ற்கு வழங்கிய விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நினைவிற் கொள்ளுங்கள்! குர்பானியில் இந்த நுட்பமான ஞானம் உள்ளது. அதாவது அவற்றின் இறைச்சி அல்லது இரத்தம் இறைவனை சென்றடைவதில்லை. மாறாக, அவற்றின் காரணமாக இறையச்சம் உருவாகின்றது; மேலும் அந்த இறையச்சத்தை இறைவன் விரும்புகின்றான் என்ற நுட்பமான ஞானம் இருக்கின்றது. சில மக்கள் இவ்வாறு ஆட்சேபனை செய்கின்றனர். அதாவது வல்ல இறைவன் நவூதுபில்லாஹ் இந்துக்களின் தேவதைகளைப் போன்று இரத்தத்தின் மீது தாகம் கொண்டவனாகவும், இறைச்சியின் மீது பசி கொண்டவனாகவும் இருக்கின்றானா? அதனால் தான் அவன் விலங்குகளை குர்பானி செய்வதற்கான கட்டளை வழங்குகிறானா? மேலும் அவற்றின் உயிர்களை பலியிடுவதை ஆர்வத்துடன் ஒப்புக் கொள்கின்றானா? மேலும் குர்பானி செய்யக் கூடியவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தி வழங்குகிறானா? என்று அவர்கள் ஆட்சேபனை செய்கின்றனர். நவூதுபில்லாஹ்.

அதற்கான பதிலை அல்லாஹ் இந்த வசனத்தில் இவ்வாறு வழங்கியுள்ளான். அதாவது குர்பானி கொடுப்பதன் மூலம் அவற்றின் இறைச்சியோ அல்லது இரத்தமோ எல்லாம் வல்ல அல்லாஹ்வை சென்றடைகின்றது என்ற ஞானம் அதில் வைக்கப்பட வில்லை. மாறாக, அவற்றின் காரணமாக மனித இதயத்தில் இறையச்சம் உருவாகின்றது; மேலும் இறையச்சம் இறைவனுக்கு விருப்பமானதாக இருக்கின்றது என்ற ஞானம் அதில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே எந்த மக்கள் ஆட்டையோ

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்....

**நபிமொழி**

**கடனை அழகிய முறையில் திருப்பி செலுத்துவதற்கான போதனை**

(2069) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் ஒட்டகத்தை கடனாக வாங்கியிருந்தார்கள். பின்னர் ஒட்டகத்திற்கு சொந்தக்காரர் அன்னாரிடம் வந்தார். மேலும் கடனை திருப்பிக் கொடுக்கும்படி கேட்டார். ஸஹாபிகள் அவரிடம் (கடுமையாக) உரையாடினர். அப்போது, அன்னார் (ஸல்) கூறினார்கள்: உரிமை படைத்தவர் பேசவே செய்வார். பின்னர் அன்னார் (ஸல்) அவருடைய ஒட்டகத்தின் வயதை விட அதிக வயதுடைய ஒட்டகத்தை அவருக்கு கொடுத்தார்கள். மேலும், கடனை அழகிய முறையில் திருப்பிக் கொடுப்பவரே உங்களில் மிகச் சிறந்தவர் ஆவார் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகள் மீது கொண்டிருந்த நேசம்**

(2610) ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஓர் ஒட்டகத்தில் சவாரி செய்திருந்தார்கள். அந்த ஒட்டகம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகத்தை முந்தி சென்றது. மேலும் அன்னாரின் தந்தையார் அன்னாரிடம், அப்துல்லாஹ்வே, நபி (ஸல்) அவர்களை விட முந்தி செல்லாதே. என்னிடம் இதனை விற்று விடுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். இது தங்களுடையதே ஆகும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அன்னார் (ஸல்) அதனை விலைக்கு வாங்கி விட்டார்கள். அதன் பிறகு, அப்துல்லாஹ்வே! இனி இது உன்னுடையதாகும். நீ விரும்பியபடி இதனிடம் பணி வாங்கிக் கொள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் ஹிபா)

* * * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இஃப்க் சம்பவத்தின் பின்னணியில் ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களுடைய வாழ்வின் சில அம்சங்களை குறித்த விளக்கம்**
**சூடானைச் சேர்ந்த இமாம் முஹம்மத் பைலூ ஸாஹிப் அவர்களின் மரணத்தையொட்டி அன்னாரைக் குறித்த நற்குறிப்பும் ஜனாஸா காயிப் தொழுகையும் மேலும் சூடானிய அஹ்மதிகளுக்காக துஆ செய்வதற்கான அறிவுரை**

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது என்ன அவதூறு சுமத்தப்பட்டதோ அதன் அசல் நோக்கம் என்னவாக இருந்தது என்பதை நாம் பார்க்க வேண்டும் (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி))**

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்துவதால் இரு நபர்களை பழி தீர்த்துக் கொள்ள முடியும் என்று எதிரிகள் எண்ணினர் என்பதை எளிதாக புரிந்து கொள்ள முடியும். ஒன்று, இறைத் தூதர் (ஸல்) அவர்களை ; மற்றொருவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஏனெனில், அன்னார் (ரலி) ஒருவரின் மனைவியாக இருந்தார்கள். மற்றொருவரின் புதல்வியாக இருந்தார்கள் (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி))**
**ஸஹாபிகள் இந்த விஷயத்தை உறுதியாக புரிந்து வைத்திருந்தனர். அதாவது இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு பிறகு வேறு ஒருவருக்கு அந்தஸ்து இருக்கின்றது என்றால் பின்னர் அவர் அபூபக்ர் (ரலி) அவர்களே ஆவார்கள். மேலும் அன்னாரே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாவாக ஆகுவதற்கு தகுதி படைத்திருந்தார்கள் என்பதை ஸஹாபிகள் நன்றாக புரிந்து வைத்திருந்தனர்**
**கிலாஃபத் என்பது அரசாட்சி அல்ல ;**
**அதுவோ இறை ஒளியை நிலைநாட்டுவதற்கான ஒரு வழிமுறையாகும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 30 ஆகஸ்ட் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஸஹுர்**மாதம் **30 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஜெர்மனி மாநாட்டிற்கு முந்தைய குத்பாக்களில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக கூறப்பட்டு வந்தது. அதில் ஹஸ்ரத் ஆயிஷா ( ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட சம்பவமும் கூறப்பட்டது. இதை குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவன் தன் பண்பில் வைத்துள்ள விஷயம் என்னவென்றால், தவ்பா இஸ்திஃக்ஃபார், துஆ மற்றும் ஸதகா ஆகியவற்றின் காரணமாக தண்டனை குறித்த தனது முன்னறிவிப்பை அகற்றி விடுகின்றான். அவ்வாறே மனிதனுக்கும் அவன் இதே நல்லொழுக்கத்தைக் கற்றுக் கொடுத்துள்ளான். திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆகியவற்றிலிருந்து நிரூபணமாவது போல், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தொடர்பாக நிகழ்ந்த சம்பவத்திற்கு எதிராக நயவஞ்சகர்கள் தீய நோக்கத்துடன் மட்டுமே அவதூறு சுமத்தினார்கள். இதை எடுத்துரைத்ததில் சில அப்பாவி ஸஹாபிகளும் இணைந்து விட்டனர். ஒரு ஸஹாபி எப்படிப்பட்டவர் என்றால், அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து இருவேளை உணவு உண்டு வந்தார். இவர் செய்த தவறின் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சத்தியம் செய்தார்கள். தண்டனையளிக்கும் விதமாக உறுதியெடுத்துக் கொண்டார்கள். இந்த முறையற்ற செயலுக்கு தண்டனையாக அவருக்கு ஒருபோதும் உணவு கொடுக்க மாட்டேன் என்று கூறினார்கள். அப்போது,

وَلْيَعْفُوْا وَلْيَصْفَحُوْا ؕ
اَلَا تُحِبُّوْنَ اَنْ يَّغْفِرَ اللّٰهُ لَكُمْ ؕ
وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ

(அவர்கள் மன்னித்து பொறுத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் உங்கள் குறைகளை மன்னிப்பதை நீங்கள் விரும்பவில்லையா? அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.) என்ற வசனம் இறங்கியது.

அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது இந்த உறுதிமொழியை முறித்துக் கொண்டார்கள். வழக்கம்போல் உணவு கொடுக்க ஆரம்பித்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இதன் அடிப்படையில் இஸ்லாமிய ஒழுக்கத்தில் உள்ள விஷயம் என்னவென்றால், தண்டனையளிக்கும் விதமாக ஒருவர் உறுதியெடுத்துக் கொண்டால் அதை முறிப்பது நல்லொழுக்கத்தைச் சார்ந்ததாகும். உதாரணமாக, ஒருவர் தம் பணியாளர் தொடர்பாக, அவருக்கு நிச்சயமாக 50 செருப்படிகள் கொடுப்பேன் என்று சத்தியம் செய்கிறார். அவருடைய தவ்பா மற்றும் மன்றாடுதல் ஆகியவற்றின் காரணமாக மன்னிப்பது இஸ்லாத்தின் நடைமுறையாகும். அதன் மூலமாக இறைவனுடைய பண்பை தமதாக்கிக் கொள்வதாகும். ஆனால், வாக்குறுதியை தாமதப்படுத்துவது ஆகுமானதல்ல. வாக்குறுதியை விட்டுவிடுவதால் கேள்வி கேட்கப்படும். ஆனால், தண்டனை பற்றி வாக்குறுதியை விட்டு விடுவதால் கேட்கப்படாது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் எனும் நூலில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தை புகாரீயின் அறிவிப்பின் ஒளியில் எடுத்துரைத்தவாறு எழுதுகிறார்கள்.

இந்த விவகாரத்தில் (புகாரியின்) இந்த அறிவிப்பு அனைத்து அறிவிப்புகளை விடவும் விளக்கமானதாகவும், தொடர்ச்சியானதாகவும் உள்ளது. இதர அறிவிப்பாளர்களின் அறிவிப்புகளிலிருந்து தனித்தனி துண்டுகளாக கிடைக்கக் கூடிய விஷயங்கள் இந்த அறிவிப்பில் ஒருங்கே இணைந்துள்ளன. அதுமட்டுமின்றி, இந்த அறிவிப்பில் இருந்து பெருமானார் (ஸல்) அவர்களின் குடும்ப வாழ்வின் மீதும் எப்படிப்பட்ட அகப்பார்வையின் ஒளி விழுகிறது என்றால் அதை எந்த ஒரு வாழ்க்கை வரலாற்று ஆசிரியராலும் கண்டும் காணாமல் இருக்க முடியாது. உறுதித் தன்மையை பொறுத்தவரையிலும் இந்த அறிவிப்பு எப்படிப்பட்ட உயரிய அந்தஸ்தை கொண்டுள்ளது என்றால் அதில் எவ்வித ஐயத்திற்கும் சந்தேகத்திற்கும் இடம் இருப்பதாக கருத முடியாது. இப்பொழுது சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நயவஞ்சகர்கள் சார்பாக எழுப்பப்பட்ட இந்தக் குழப்பம் எந்த அளவு பயங்கரமானதாக இருந்தது என்பதாகும். இதில் பரிசுத்தமான, மிகவும் உயரிய இறையச்சத்தை கொண்ட தீமைகளிலிருந்து விலகி இருந்த ஒரு பெண்ணுடைய கற்பின் மீது தாக்குதல் தொடுப்பது மட்டுமே நோக்கமாக இருக்கவில்லை. மாறாக இதிலிருந்த மிகப் பெரிய நோக்கம் என்னவென்றால், மறைமுகமாக தூய இஸ்லாத்தின் தோற்றுனரின் கண்ணியத்தை சீர்குலைப்பதும், இஸ்லாமிய சமூகத்தில் ஒரு பயங்கரமான அதிர்வை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. நயவஞ்சகர்கள் இந்த அசுத்தமான, கீழ்த்தரமான பிரச்சாரத்தை எந்த அளவு சர்ச்சைக்குள்ளாக்கினார்கள் என்றால் சில அப்பாவி உண்மை முஸ்லிம்களும் அவர்களின் சூழ்ச்சி வலையில் சிக்கி தடுமாற்றம் கண்டு விட்டார்கள்; அவர்களுடைய சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டார்கள். அம்மக்களுள் ஹஸ்ஸான்

பின் ஸாபித் எனும் கவிஞர், மேலும் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் அவர்களின் சகோதரியான ஹம்னா பின்த் ஜஹ்ஷ் மற்றும் மிஸ்தஹ் பின் உஸாஸா ஆகியோரின் பெயர்களும் குறிப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் பெருந்தன்மை எவ்வாறானதாக இருந்தது என்றால், இவர்கள் அனைவரையும் அவர்கள் மன்னித்து விட்டார்கள். இவர்கள் தொடர்பாக தம் உள்ளத்தில் எவ்வித கோபத்தையும் வைத்திருக்கவில்லை. அறிவிப்பில் வருகிறது:

அதற்குப் பிறகு எப்பொழுதெல்லாம் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை சந்திக்க வந்தார்களோ அப்பொழுதெல்லாம் அவர்கள் மலர்ந்த முகத்துடன் அவர்களை சந்தித்துள்ளார்கள். ஒருமுறை அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை சந்திக்க ஆஜரானார்கள். அப்பொழுது மஸ்ரூக் எனும் ஒரு முஸ்லிமும் அங்கு இருந்தார். தங்களை சந்திப்பதற்காக ஹஸ்ஸானுக்கு நீங்கள் அனுமதி வழங்குகிறீர்களா?என்று வியப்புடன் மஸ்ரூக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், அதை விடுங்கள்; பரிதாபத்திற்குரிய இவர் ஏற்கனவே கண்களுடைய துன்பத்தில் சிக்கி இருக்கிறார். இது குறைவான தண்டனையா என்ன? என்று பதிலளித்தார்கள்.

அதாவது அவருக்கு கண்களில் நோய் ஏற்பட்டு இருந்தது.

பிறகு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக காஃபிர்களுக்கு எதிராக எழுதிய அந்த கவிதையை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன் என்று கூறினார்கள். ஆகவே ஹஸ்ஸான் (ரலி) அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அவர் உள்ளே வந்து அமர்ந்தார்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை புகழ்ந்தவாறு பின்வரும் கவிதையை கூறினார்:

حَصَانٌ رَزَانٌ مَا تُزَنُّ بِرِيبَةٍ
وَتُصْبِحُ غَرْثَى مِنْ لُحُومِ الْغَوَافِلِ

அதாவது, அவர்கள் பரிசுத்தமான கற்புடைய பெண்மணி ஆவார்கள். அவர்கள் அறிவுடையவரும், புத்திக்கூர்மை உள்ளவரும் ஆவார்கள். அவர்களுடைய அந்தஸ்து சந்தேகம் மற்றும் ஐயத்திற்கு அப்பாற்பட்டதாகும். அவர்கள் கவனமற்ற, குற்றமற்ற பெண்களின் இறைச்சியை உண்ணுவதில்லை.

அதாவது அவர்கள் மீது அவதூறு சுமத்துவதில்லை. அத்துடன் அவர்கள் அப்பெண்களை குறித்து புறங்கூறுவதும் இல்லை.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இந்த கவிதையை கேட்ட போது,

وَلٰكِنْ اَنْتَ

நீர் அவ்வாறு இல்லை என்று கூறினார்கள். இன்னோர் அறிவிப்பில்,

لَسْتَ كَذَالِكَ

. என்று கூறியதாகவும் வருகிறது. அதாவது உங்களுடைய நிலை எவ்வாறு உள்ளது? நீங்கள் இந்த சிறப்பம்சத்திற்கு சொந்தக்காரராக நிரூபணமாகவில்லையே? குற்றமற்ற எனக்கு எதிராக நீங்கள் அவதூறு சுமத்துவதில் இணைந்து விட்டிருந்தீர்களே? என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் வில்லியம் முயர் ஸாஹிப் எனும் ஓரியண்டலிஸ்ட் தொடர்பாக எழுதுகிறார்கள்:

வில்லியம் ஸாஹிபுடைய அரபி அறிவு அல்லது மார்க்க துவேஷத்தை பாருங்கள்!

இந்த கவிதைக்கு முற்றிலும் தவறான மற்றும் அரபி மொழி விதிக்கு எதிரான பொருளை கொடுத்தவாறு, ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களின் மெல்லிய தேகத்தை புகழ்ந்துள்ளார்கள் என்றும் அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் கர்வத்துடன் ஹஸ்ஸான் (ரலி) அவர்களின் பருமனான உடலை ஏளனம் செய்துள்ளார்கள் என்றும் எழுதி இருக்கிறார்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: வில்லியம் முயர் ஸாஹிப் இந்த கவிதையை எடுத்துரைப்பதில் இன்னும் தெளிவான தவறுகளையும் இழைத்துள்ளார். உதாரணமாக, ஸஃப்வான் அவர்களும் ஆயிஷா (ரலி) அவர்களும் செல்லும் போது வழியில் படையை சந்திக்க இயலவில்லை என்றும் பிறகு எல்லாரும் காணும் வகையில் மதீனாவில் நுழைந்தார்கள் என்றும் எழுதி இருக்கிறார். ஆனால், இந்த விஷயம் முற்றிலும் தவறானதும், அடிப்படையற்றதும் ஆகும். ஏனெனில், ஸஃப்வான் (ரலி) அவர்களும் ஆயிஷா (ரலி) அவர்களும் சில மணி நேரங்களுக்கு பிறகு வழியிலேயே இஸ்லாமியப் படையுடன் சேர்ந்து விட்டார்கள் என்று ஹதீஸ் மற்றும் வரலாறு ஆகியவற்றில் இருந்து ஒருமித்த வண்ணம் நிரூபணமாகிறது. வில்லியம் முயர் ஸாஹிப் அடிப்படையற்ற அவதூறை குறித்து எழுதும்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அப்பாவி தன்மையை ஒப்புக் கொண்டு உள்ளார்கள் என்பது நல்ல விஷயமாகும். உதாரணமாக வில்லியம் முயர் எழுதுகிறார்:

ஆயிஷா (ரலி) அவர்கள் அந்த அவதூறிலிருந்து குற்றமற்றவராக இருந்தார் என்பது அவர்களுடைய முந்தைய, பிந்தைய வாழ்வில் இருந்து தெரிய வருகிறது. அதாவது அறிவுப்பூர்வமாகவும் சான்றுகளின் அடிப்படையிலும் இந்த அவதூறு முற்றிலும் தவறானது என்றும், பொய்யானது என்றும் தெளிவாகின்றது. ஏனெனில், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இஸ்லாமிய படையை விட்டு பின்தங்கி விடுவதும், ஸஃப்வான் (ரலி) அவர்களுடன் வந்தடைவதும் முழுக்க முழுக்க தற்செயலாக நிகழ்ந்த சம்பவமேயன்றி வேறொன்றும் கிடையாது. அவதூறு சுமத்தக் கூடியவர்களிடம் இதை தவிர வேறு எந்த விஷயமும் இல்லை. அதாவது எவ்வித சாட்சியும் கிடையாது; சான்றும் கிடையாது. ஒரு குற்றச்சாட்டு நிரூபணம் ஆகாத வரை அதை ஒருபோதும் உண்மை என்று கருத முடியாது என்பதும் வெளிப்படையாகும். குறிப்பாக எவர்களுடைய வாழ்வில் அவர்களின் பரிசுத்தத் தன்மையை குறித்து சான்று கிடைக்கிறதோ (அம்மக்களை குறித்து நாம் ஒருபோதும் இவ்வாறு கருத முடியாது).




ஆனால், முஸ்லிம்களுக்கு மேற்கொண்டு ஆறுதல் வழங்குவதற்காகவும், வருங்காலத்தில் இவ்வாறான விவகாரங்களில் ஓர் அடிப்படை சட்டத் திட்டம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் இறைவனுடைய வஹீ இறங்கியது. அது இந்த அவதூறை முழுக்க முழுக்க பொய் என்று கூறியதுடன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) மற்றும் ஸஃப்வான் பின் முஅத்தல் ஆகியோரின் குற்றமற்றத்தன்மையை வெளிப்படுத்தியது. அத்துடன் வருங்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பாக எப்படிப்பட்ட ஓர் அடிப்படை சட்டத்தை உலகிற்கு முன்னால் எடுத்து வைத்தது என்றால் அதில் மக்களுடைய கண்ணியம் மரியாதை, சமூகத்தின் அமைதி சமாதானம் மற்றும் சமுதாயத்தின் நல்லொழுக்கங்களை பாதுகாப்பதில் பெரும் பங்கு உள்ளது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தியதற்கான காரணத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் அசல் நோக்கம் என்னவாக இருந்தது? என்று நாம் பார்க்க வேண்டும். (குற்றம் சுமத்திய) அந்த மக்களுக்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஏதாவது பகை இருந்தது என்பது காரணமாக இருக்க முடியாது. ஒரு வீட்டிற்குள் இருக்கின்ற பெண்ணுக்கு அரசியலோடு எந்த தொடர்பும் கிடையாது; பொறுப்புகளுடன் எந்த தொடர்பும் கிடையாது; செல்வத்தை விநியோகிப்பதிலும் எந்த தொடர்பும் கிடையாது; போர்களுடனும் எந்த தொடர்பும் கிடையாது; எதிராளியாக இருக்கக்கூடிய சமுதாயங்கள் மீது படையெடுப்பதிலும் எந்த தொடர்பும் கிடையாது; ஆட்சியுடன் எந்த தொடர்பும் கிடையாது; பொருளாதாரத்துடன் எந்த தொடர்பும் கிடையாது. இப்படிப்பட்ட பெண் மீது யாருக்கு என்ன வெறுப்பு இருக்க முடியும்? அந்த பெண்மணிக்கு இந்த விஷயங்களுடன் எந்த தொடர்புமே கிடையாது. ஆகவே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் நேரடியாக வெறுப்பு கொள்வதற்கு எந்த காரணமும் கிடையாது. இந்த குற்றச்சாட்டை குறித்து இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும். ஒன்று நவூதுபில்லாஹ் இந்த குற்றச்சாட்டு உண்மையானதாக இருக்க வேண்டும். இதை எந்தவொரு நம்பிக்கையாளரும் ஒரு கணம் கூட ஒப்புக் கொள்ள மாட்டார். குறிப்பாக அல்லாஹ் அர்ஷில் இருந்து இந்த அசுத்தமான சிந்தனையை மறுத்திருக்கும் போது; இரண்டாவது காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்துவதால் வேறு சிலருக்கு நஷ்டம் ஏற்படுத்துவது நோக்கமாக இருந்திருக்கும்.

இப்பொழுது நாம் சிந்திக்க வேண்டியது என்னவென்றால், எந்த நபர்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதால் முனாஃபிக்களுக்கும் அவர்களுடைய தலைவர்களுக்கும் பயன் கிடைக்கிறதோ அந்த நபர்கள் யார் என்பதாகும். இதன் மூலமாக நயவஞ்சகர்கள் யாரையெல்லாம் பழி தீர்க்க விரும்புகிறார்கள் என்பதாகும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்துவதால் இரு நபர்களை பழி தீர்க்க முடியும் என்பது சாதாரணமாக சிந்தித்தாலே அறிய முடிகிறது.ஒருவர், பெருமானார் (ஸல்) அவர்கள் ஆவார்கள். இன்னொருவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)

அவர்கள் ஆவார்கள். ஏனெனில், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒருவருடைய மனைவியாக இருந்தார்கள்; இன்னொருவருடைய மகளாக இருந்தார்கள். இந்த இரு நபர்களும் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்களுக்கு அவப்பெயர் ஏற்படுவதால் அரசியல் ரீதியாகவும், பகைமை ரீதியாகவும் சிலருக்கு லாபம் கிடைக்க வாய்ப்பு இருந்தது அல்லது இவர்களுக்கு அவப்பெயர் உண்டாக்குவது சிலருடைய நோக்கமாக இருந்தது. இல்லை என்றால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதில் எந்த ஒரு நபருக்கும் ஆர்வம் இருந்திருக்க முடியாது. அதிகபட்சமாக மற்ற மனைவிமார்களுக்கு இதில் தொடர்பு இருந்திக்க முடியும். அதாவது பெருமானார் (ஸல்) அவர்களின் மற்ற மனைவிகள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை பெருமானார் (ஸல்) அவர்களின் பார்வையில் இருந்து விழ செய்வதற்காகவும், நல்ல பெயர் எடுப்பதற்காகவும் இந்த விவகாரத்தில் மற்ற மனைவிகள் யாராவது பங்கெடுத்திருக்கலாம். ஆனால், வரலாறு சாட்சி பகர்வது என்னவென்றால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் இந்த விவகாரத்தில் மற்ற எந்த மனைவிமாரும் எவ்விதத்திலும் பங்கெடுக்கவில்லை. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய சுய கூற்றே உள்ளது. பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவிகளில் எந்த மனைவியாவது என்னுடன் போட்டியிட முடியும் என்றால் அது ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் மட்டுமே ஆவார்கள். அவர்களைத் தவிர வேறு எந்த மனைவிமார்களையும் நான் என்னுடன் போட்டியிட தகுந்தவராக நான் கருதியதில்லை. ஏனெனில், அவர்கள் தான் அதிகமாக பேசுவார்கள். என் மீது அவதூறு சுமத்தப்பட்ட போது எல்லாரையும் விட அதிக அழுத்ததுடன் யாராவது இந்த அவதூறை மறுத்தார்கள் என்றால், அது ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள்தான். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் இந்த பேருபகாரத்தை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆகவே, ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹஷ் (ரலி) அவர்கள் மட்டுமே ஆவார்கள். அவர்களைத் தவிர வேறு எந்த மனைவியையும் என்னுடன் போட்டியிட தகுந்தவராக நான் கருதியதில்லை. ஏனெனில், அவர்கள் தான் அதிகமாக பேசுவார்கள். என் மீது அவதூறு சுமத்தப்பட்ட போது எல்லாரையும் விட அதிக அழுத்தத்துடன் யாராவது இந்த அவதூறை மறுத்தார்கள் என்றால் அது ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள்தான். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் இந்த பேருபகாரத்தை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அவர்களுடன் யாருக்காவது பகைமை இருந்திருக்கும் என்றால் அது பெருமானார் (ஸல்) அவர்களின் மற்ற மனைவிகளாக இருந்திருக்கும். பெருமானார் (ஸல்) அவர்களின் பார்வையிலிருந்து அன்னாரின் அந்தஸ்து வீழ்ந்து விட வேண்டும் மேலும் தம்முடைய அந்தஸ்து அதிகரித்து விட வேண்டும் என்பதற்காகவும் அந்த மனைவிமார்கள் இதில் பங்கெடுத்திருக்கலாம். ஆனால் வரலாற்றில் இருந்து நிரூபணமானது என்னவென்றால், அந்த மனைவிமார்களில் எவரும் இந்த விவகாரத்தில் எவ்வித தலையீடும் செய்யவில்லை.

பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவிமார்களில் எவரிடம் இதைக் குறித்து கேட்கப்பட்டாலும் அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை புகழ்ந்தே கூறினார்கள்.

சுருக்கமாக, ஆண்கள், பெண்களுடன் பகைமை பாராட்டுவதற்கு எந்த காரணமும் கிடையாது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இருந்த வெறுப்பின் காரணமாகவோ அல்லது ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் மீது இருந்த வெறுப்பின் காரணமாகவோ ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்டிருக்கலாம். பெருமானார் (ஸல்) அவர்களுடைய அந்தஸ்து எப்படிப்பட்டது என்றால், அவதூறு சுமத்தியவர்களால் அதை ஒருபோதும் பறிக்க முடியாது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பிறகும் கூட தம்முடைய நோக்கங்களை தம்மால் பூர்த்தி செய்ய இயலாமல் போய்விடுமோ என்ற அச்சம் தான் அவர்களுக்கு இருந்தது. அன்னாருக்குப் பிறகு கலீஃபாவாக ஆகுவதற்கு யாராவது தகுதி படைத்தவராக இருந்தார் என்றால் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்தான் என்பதை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே இந்த அபாயத்தை உணர்ந்து கொண்டு அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தினார்கள். அதன் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களின் பார்வையில் இருந்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் நன்மதிப்பு விழுந்து விட வேண்டும் என்றும், அவர்களுடைய அந்தஸ்து விழுந்து விடுவதன் மூலமாக முஸ்லிம்களிடத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இருக்கும் அந்தஸ்து அழிந்து விட வேண்டும் என்றும், முஸ்லிம்கள் அவர்கள் மீது தப்பெண்ணம் கொண்டு அவர்கள் மீது வைத்திருக்கும் கொள்கை பிடிப்பை விட்டு விட வேண்டும் என்றும் இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆகுவதற்கான வாசல் முற்றிலும் மூடப்பட்டு விட வேண்டும் என்றும் விரும்பினார்கள். இதன் காரணமாகத்தான் இறைவன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தை திருக்குர்ஆனில் சூரா அந்நூரில் எடுத்துரைத்த பிறகு கிலாஃபத்தைக் குறித்தும் எடுத்துக் கூறியுள்ளான்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அடுத்ததாக யாருக்காவது அந்தஸ்து இருக்கும் என்றால் அது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்தான் என்று ஸஹாபிகள் பரஸ்பரம் பேசிக் கொண்டதாக ஹதீஸ்களில் தெளிவாக காணப்படுகிறது. ஹதீஸ்களில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், ஆயிஷாவே! அபூபக்ர் (ரலி) அவர்களை நான் எனக்குப் பிறகு நியமிக்க விரும்புகிறேன். ஆனால், அல்லாஹ்வும், நம்பிக்கை கொண்டவர்களும் அவரைத் தவிர வேறு எவரிடத்திலும் திருப்திக் கொள்ள மாட்டார்கள் என்பதை நான் அறிவேன் என்று கூறினார்கள். அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைத் தான் தேர்ந்தெடுப்பார்கள் என்று கூறினார்கள்.

சுருக்கமாக, பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஸஹாபிகளில் எவருக்காவது அந்தஸ்து இருந்தது என்றால், அது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்தான் அன்னாருடைய கலீஃபாவாக ஆகுவதற்கு தகுதி படைத்தவராக இருந்தார்கள் என்பதை ஸஹாபிகள் உறுதியாக புரிந்திருந்தனர். மக்கத்து வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அதில் அரசாட்சியைக் குறித்தோ அதன் அமைப்பைக் குறித்தோ கேள்வி எழுவதற்கே இடமில்லை. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்த பிறகு அரசாட்சி உருவாகி விட்டது. அன்னாருக்கு பிறகு யாரேனும் ஒருவர் கலீஃபாவாக ஆகி இஸ்லாமிய அமைப்பு நீண்டு விடக் கூடாதே ; நிரந்தரமாக நாம் அழிவுக்கு ஆளாகி விடக் கூடாதே என்ற கேள்வி இயல்பாகவே முனாஃபிக்களின் உள்ளத்தில் எழுந்தது. எதிரிகளாக இருந்தவர்கள் இதை நினைத்தார்கள். ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்ததன் காரணமாக அவர்களின் பல எதிர்பார்ப்புகள் பொய்யாகிப் போயின. வரலாற்றில் இருந்து நிரூபணமாவது என்னவென்றால், மதீனாவில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் என்ற அரேபியாவின் இரு கோத்திரங்கள் இருந்தன. இவர்கள் எப்பொழுதும் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருவர் மற்றவரை கொலை செய்து கொண்டு இருந்தார்கள். இந்த சண்டையின் விளைவாக தங்களுடைய குல ஆதிக்கம் அழிந்து கொண்டு செல்வதை அவர்கள் கண்டபோது பரஸ்பர சமரசத்திற்கு அவர்கள் உடன்பட்டார்கள். நாம் பரஸ்பரம் ஒற்றுமையாக இருக்கலாம் ; யாரேனும் ஒரு நபரை நம் அரசராக ஆக்கிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தனர். ஆகவே அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய கோத்திரங்கள் பரஸ்பரம் சமாதானம் செய்து கொண்டன. அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் என்பவனை மதீனாவின் அரசனாக ஆக்க வேண்டும் என்று தீர்மானித்தனர். இந்த தீர்மானத்திற்குப் பிறகு அவர்கள் ஆயத்தங்களையும் துவங்கி விட்டார்கள். அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூலுக்காக கிரீடம் உருவாக்குவதற்கு கட்டளையும் இடப்பட்டு விட்டது. அந்த காலகட்டத்தில்தான் மதீனாவைச் சேர்ந்த சில ஹாஜிகள் மக்காவிலிருந்து திரும்பி வந்தார்கள். இறுதி காலத்தின் நபி மக்காவில் தோன்றி விட்டார்; நாங்கள் அவரிடம் பைஅத் செய்து வந்துள்ளோம் என்று அவர்கள் கூறினார்கள். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்களின் வாதத்தைக் குறித்து வதந்திகள் பரவ ஆரம்பித்தன. சில நாட்களுக்குப் பிறகு இன்னும் சில மக்களும் மக்காவுக்கு சென்று அன்னாரிடம் பைஅத் செய்தார்கள். தாங்கள் எங்களுடைய தர்பிய்யத் மற்றும் தப்லீஃக்கிற்காக ஏதேனும் ஆசிரியரை எங்களுடன் அனுப்பி வையுங்கள் என்று அவர்கள் அன்னாரிடம் கோரிக்கை வைத்தனர். ஆகவே அன்னார் ஒரு ஸஹாபியை முபல்லிஃக் ஆக அனுப்பி வைத்தார்கள். (பிறகு) மதீனாவில் பல மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அந்நாட்களில் மக்காவில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் அன்னாருடைய

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716

89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

ஸஹாபிகளுக்கும் பெரும் துன்பங்கள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆகவே மதீனாவாசிகள், தாங்கள் மதீனாவுக்கு வருகை தாருங்கள் என்று அன்னாரிடம் கோரிக்கை வைத்தனர். ஆகவே, அன்னார் (ஸல்) ஸஹாபிகளுடன் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூலுக்காக கிரீடம் ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அது பயனற்றதாக ஆகிவிட்டது. ஏனெனில், மதீனாவாசிகளுக்கு ஈருலகின் அரசர் கிடைத்து விட்டபோது, அவர்களுக்கு வேறு எந்த அரசரின் தேவை இருக்கின்றது?

தாம் அரசன் ஆகுவதற்கான எல்லா சாத்தியங்களும் வீணாகிப் போவதை அப்துல்லாஹ் பின் ஸலூல் கண்டபோது, அவனுக்கு கடுங்கோபம் உண்டாயிற்று. அவன் வெளிப்படையில் முஸ்லிம்களுடன் இணைந்து விட்டிருந்தான். ஆனால் எப்பொழுதும் இஸ்லாத்தில் பிளவை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். அவன் இப்போது வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தான். ஆகவே இப்போது அவனது உள்ளத்தில் ஏதேனும் விருப்பம் இருந்தது என்றால் அது ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணித்த பிறகு, தான் மதீனாவின் அரசனாக ஆக வேண்டும் என்பதே ஆகும். ஆனால், இறைவன் அவனுடைய இந்த விருப்பத்திலும் அவனுக்கு இழிவை ஏற்படுத்தி விட்டான். ஏனெனில், அவனுடைய சொந்த மகன் தூய ஒரு நபராக இருந்தார். அதனுடைய பொருள் என்னவென்றால், அவன் அரசனாக ஆகிவிட்டாலும் கூட அவனுக்கு பிறகு ஆட்சி மீண்டும் இஸ்லாத்திடமே வந்து விடும் என்பதாகும். அது மட்டுமின்றி முஸ்லிம்களிடத்தில் ஒரு புதிய அமைப்பு உருவானபோது முஸ்லிம்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், இஸ்லாமிய ஆட்சியின் வழிமுறை என்ன? தங்களுக்குப் பிறகு இஸ்லாத்திற்கு என்ன நிகழும்? இவ்விஷயத்தில் முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும்? போன்ற பல்வேறு கேள்விகளை கேட்க ஆரம்பித்து விட்டார்கள். இவ்வகையிலும் இறைவன் அவனை தோல்வியுறச் செய்தான். இப்பொழுது இஸ்லாமிய அரசாட்சி எப்படிப்பட்ட வகையில் உருவாகும் என்றால் அதில் தமது பங்களிப்பு எதுவுமே இல்லாமல் இருக்கும் என்பதை அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் கண்டபோது அவனுக்கு அச்சம் தோன்றியது. அவன் இந்த நிலைமைகளை தடுக்க விரும்பினான்.

ஆகவே இதற்காக அவன் சிந்தித்த போது, இஸ்லாமிய ஆட்சியை இஸ்லாத்தின் அடிப்படையில் யாராவது நிலை பெறச் செய்ய முடியும் என்றால் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்தான். பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு முஸ்லிம்களின் பார்வை அவர்களின் பக்கமே இருக்கிறது. முஸ்லிம்கள் அனைவரையும் விட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை கண்ணியத்திற்குரியவராக கருதுகிறார்கள் என்பது அவனுக்கு புலப்பட்டது. ஆகவே (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்தி விட வேண்டும் என்றும், மக்களின் பார்வையில் அவர்களை விழச் செய்து விட வேண்டும் என்றும், இன்னும் கூறுவதென்றால் பெருமானார் (ஸல்) அவர்களின் பார்வையிலும் அவர்களை விழச் செய்து விட வேண்டும்; அதில்தான் தனக்கு நன்மை இருப்பதாக அவன் கருதினான்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு போரில் பின் தங்கிய சம்பவம் நிகழ்ந்த போது அவனுக்கு இந்த தீய எண்ணத்தை முழுமை செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த தீயவன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது மிகவும் அசுத்தமான அவதூறை கற்பித்தான். திருக்குர்ஆனில் இதைக் குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது; ஆனால், ஹதீஸ்களில் இதனுடைய விளக்கம் காணக் கிடைக்கிறது. இதன் மூலமாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுடைய பார்வையிலும் இழிவானவராக ஆகிவிடுவார்கள்; பெருமனார் (ஸல்) அவர்களுடன் அவருக்கு உள்ள தொடர்புகளும் சீர்குலைந்து போய்விடும். எந்த (இஸ்லாமிய) அமைப்பு நிலை பெறுவது அவனுக்கு உறுதியாக தென்பட்டதோ, எந்த அமைப்பு நிலை பெறுவதால் அவனது எதிர்பார்ப்புகள் வீணாகிப் போக இருந்தனவோ அவை நிலைநாட்டப்படுவதில் சிக்கல் ஏற்படும் என்பதே அவனது நோக்கமாக இருந்தது. ஏனெனில், முனாஃபிக் தன் மரணத்தை எப்பொழுதும் தொலைவில் இருப்பதாக கருதுகிறான்; மற்றவர்களுடைய மரணத்தை குறித்து அவன் அனுமானித்துக் கொண்டே இருக்கின்றான். ஆகவே அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூலும் தன் மரணம் வெகு தொலைவில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தான். பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே (இவ்வாறு) முயற்சித்து முயற்சித்து தான் மரணித்துப் போவதை பற்றி அவன் அறியாதவனாக இருந்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் இறந்து போய்விட்டால் தாம் அரேபியாவின் அரசனாக ஆகிவிடுவேன் என்று அவன் யூகித்துக் கொண்டிருந்தான். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நன்மை, இறையச்சம், பெருமை ஆகியவை முஸ்லிம்களிடத்தில் ஒப்புக் கொள்ளப்படுகின்றன என்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் தொழ வைப்பதற்காக வருகை தராத சமயங்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருடைய இடத்தில் தொழ வைக்கிறார்கள் என்றும் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து ஏதேனும் மார்க்கத் தீர்ப்பு கேட்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத சமயங்களில் முஸ்லிம்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் மார்க்க தீர்ப்பு கேட்கிறார்கள் என்பதையும் அவன் கண்டபோது, வருங்காலத்தில் தமக்கு அரசாட்சி கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு இது கடும் கவலையை ஏற்படுத்தியது. இதை அகற்ற வேண்டும் என்று அவன் விரும்பினான். ஆகவே இதை அகற்றுவதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் புகழையும், மகத்துவத்தையும் முஸ்லிம்களின் பார்வையில் இருந்து விழச் செய்வதற்காக அவன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தினான். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது வெறுப்பு தோன்ற வேண்டும் என்றும், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அன்னார் வெறுப்பு கொள்வதன் விளைவாக அன்னாருடைய பார்வையிலும் முஸ்லிம்களின் பார்வையிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இருக்கின்ற கண்ணியம் குறைய வேண்டும் என்றும், அவர்கள் வருங்காலத்தில் கலீஃபாவாக ஆகக் கூடிய சாத்தியம் இல்லாமல் ஆகிவிட வேண்டும் என்றும் அவன் விரும்பினான்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்துடன் தொடர்புப்படுத்தி கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேற்கொண்டு எழுதுகிறார்கள்:

சூரா அந்நூருடைய ஆரம்பம் முதல் அதன் இறுதி வரை ஒரே கருத்துதான் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. முதலில், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது சுமத்தப்பட்ட அவதூறைப் பற்றிய குறிப்பு உள்ளது. ஏனெனில், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்துவதன் அசல் குறிக்கோள் என்னவாக இருந்தது என்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இழிவுபடுத்தப்பட வேண்டும் என்பதும், பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இருந்த தொடர்புகளில் விரிசல் உருவாக வேண்டும் என்பதும், அதன் விளைவாக முஸ்லிம்களின் பார்வையில் அவர்களின் கண்ணியம் குறைந்து விட வேண்டும் என்பதும், பெருமானார் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்கள் கலீஃபாவாக ஆகக் கூடாது என்பதும் ஆகும். ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பிறகு முஸ்லிம்களின் பார்வை ஒருவர் மீது உள்ளது என்றால் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மட்டுமே ஆவார்கள் என்பதை அப்துல்லாஹ் பின் உபை ஸூலூல் (முன்பே) அறிந்து கொண்டான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மூலமாக கிலாஃபத் நிலைபெற்று விட்டால் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் அரசனாக ஆகுவதற்கு கண்ட கனவுகள் ஒருபோதும் நிறைவேறாது. ஆகவே அல்லாஹ் இந்த அவதூறு குறித்து எடுத்துரைத்த பிறகு உடனடியாக கிலாஃபத்தை பற்றி எடுத்துக் கூறியுள்ளான். கிலாஃபத் என்பது அரசாட்சி கிடையாது. அது இறை ஒளியை நிலை பெற செய்வதற்கான ஒரு வழிமுறையாகும். ஆகவே அதை நிலைபெறச் செய்வதை அல்லாஹ் தன் கையில் வைத்துள்ளான். அது வீணாகிப் போவது என்பது நுபுவ்வத்தின் ஒளியும், இறை ஒளியும் வீணாகிப் போவதாகும். ஆகவே அவன் அந்த ஒளியை கண்டிப்பாக நிலைபெறச் செய்வான். எவரை அவன் விரும்புகிறானோ அவரை அவன் கலீஃபாவாக ஆக்குவான். எந்த அளவுக்கு என்றால், முஸ்லிம்களிடத்தில் இருந்து ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களை கிலாஃபத்தில் அமர்த்தி இந்த ஒளியின் காலத்தை நீடிக்க செய்வான் என்று அவன் வாக்குறுதி கொடுத்துள்ளான். நீங்கள் அவதூறு சுமத்த விரும்புகிறீர்கள் என்றால் சுமத்திக் கொள்ளுங்கள். உங்களால் கிலாஃபத்தை அழிக்கவும் முடியாது ; கிலாஃபத்தில் அமர்வதிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விலக்கவும் முடியாது. ஏனெனில், கிலாஃபத் ஓர் ஒளியாகும். அது அல்லாஹ்வுடைய ஒளியை வெளிப்படுத்துவதற்குரிய ஒரு வழிமுறையாகும். மனிதன் தன் திட்டங்களால் அதை எவ்வாறு அணைக்க முடியும்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நபிமார்களின் நிலையும் இவ்வாறுதான் உள்ளது. இறைவன் ஒரு விஷயத்தைக் குறித்து அவர்களுக்கு தகவல் தெரிவிக்கும் போது அவர்கள் அதை விட்டு விலகி விடுகிறார்கள் அல்லது அதை மேற்கொள்கிறார்கள். பாருங்கள்! ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தில் முதலில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எவ்வித தகவலும் கொடுக்கப்படவில்லை. எந்த அளவுக்கென்றால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தம் தந்தையின் வீட்டுக்குச்

செல்லும் நிலை ஏற்பட்டது. நீங்கள் (தவறு) செய்திருந்தால் தவ்பா செய்யுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்களும் கூறினார்கள். இந்த சம்பவங்களை காணும் போது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவிற்கு நிம்மதியற்ற நிலை இருந்தது என்பது தெளிவாக தெரிகின்றது. ஆனால், ஒரு நேரம் வரை இந்த இரகசியம் அன்னார் (ஸல்) மீது வெளிப்படவில்லை. ஆனால் இறைவன் தன் வஹீ மூலமாக குற்றமற்றவராக ஆக்கினான். மேலும் கூறினான்:

اَلْخَبِيْثٰتُ لِلْخَبِيْثِيْنَ وَالْخَبِيْثُوْنَ لِلْخَبِيْثٰتِ

وَالطَّيِّبٰتُ لِلطَّيِّبِيْنَ وَالطَّيِّبُوْنَ لِلطَّيِّبٰتِ

(அதாவது, கெட்ட பெண்கள் கெட்ட ஆண்களுக்குத் தகுந்தவர் ஆவர். கெட்ட ஆண்கள் கெட்ட பெண்களுக்குத் தகுந்தவர் ஆவர். நல்ல பெண்கள் நல்ல ஆண்களுக்குத் தகுந்தவர் ஆவர். நல்ல ஆண்கள் நல்ல பெண்களுக்குத் தகுந்தவர் ஆவர்) என்று கூறிய போது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த அவதூறுடைய உண்மைத் தன்மை தெரிய வந்தது. இதனால் பெருமானார் (ஸல்) அவர்களின் மகத்துவத்தில் ஏதேனும் வேறுபாடு ஏற்பட்டதா என்ன? ஒருபோதும் கிடையாது. எவர் இவ்வாறு எண்ணம் கொள்வாரோ அவர் அநீதியாளரும், இறைவனுக்கு அஞ்சாதவரும் ஆவார். இது நிராகரிப்பு வரை சென்றடைகிறது. பெருமானார் (ஸல்) அவர்களும் (பிற) நபிமார்களும் தாம் எல்லாவற்றையும் அறிந்தவர்கள் என்று ஒருபோதும் வாதித்தது கிடையாது. எல்லாவற்றையும் அறிந்தவனாக இருப்பது இறைவனுக்குரிய மகத்துவம் ஆகும். இவர்கள் நபிமார்களின் நடைமுறையை அறிந்தவர்களாகவும் தெரிந்தவர்களாகவும் இருப்பார்கள் என்றால் இதுபோன்ற ஆட்சேபனையை ஒருபோதும் செய்ய மாட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீது ஆட்சேபனை செய்யக் கூடியவர்களுக்கும் இதன் மூலமாக அன்னார் பதில் கூறி வாயடைக்கச் செய்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரங்களின் தலைவர்களுக்கிடையில் சமாதானம் செய்து வைத்த குறிப்பும் காணப்படுகிறது. அவர்களுக்கிடையில் கொஞ்சம் பகைமை தோன்றியிருந்தது. ஓர் அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் சில நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு, இன்னும் சில ஸஹாபிகளை உடன் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களிடத்தில் சென்றார்கள். அங்கு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் உணவை எடுத்து வைத்த போது, பெருமானார் (ஸல்) அவர்களும் மற்ற ஸஹாபிகளும் அதிலிருந்து உண்டார்கள். பிறகு அன்னார் (ஸல்) அங்கிருந்து புறப்பட்டு சென்றார்கள். பின்னர் சிலநாட்கள் வரை அன்னார் (ஸல்) காத்திருந்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு மேலும் சில ஸஹாபிகளை உடன் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் வீட்டுக்கு இந்த முறை சென்றார்கள். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் உணவு எடுத்து வைத்த போது அன்னாரும் ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்களும் மற்ற ஸஹாபிகளும் உண்டார்கள். பின்னர் அன்னார் (ஸல்) திரும்பி வந்தார்கள். இவ்வாறு அன்னார் (ஸல்) ஏன் செய்தார்கள்? என்றால், அதன் மூலமாக அவர்களின் உள்ளங்களில் இருந்த பகைமை நீங்கி விட வேண்டும் என்று விரும்பினார்கள். அதாவது ஒருமுறை ஒருவருடைய வீட்டுக்கு செல்லும்போது இன்னொருவரை அழைத்துச் சென்றார்கள். மற்றொரு முறை இன்னொருவரை அழைத்துக் கொண்டு முதலாமவர் வீட்டுக்கு சென்றார்கள். அதன் மூலமாக வெறுப்புகள் பரஸ்பரம் முடிவுக்கு வரவேண்டும் என்று விரும்பினார்கள். அங்கு உணவு உண்டார்கள்; ஒருவர் மற்றவருக்கு உணவு அளித்தார். இவ்வாறு வெறுப்புகள் நீங்கின. பரஸ்பர அன்பு நேசத்தை உருவாக்குவதற்கு சமாதானம் செய்து வைப்பதற்கு இதுவும் அன்னாருடைய ஒரு வழிமுறையாக இருந்தது.

அவதூறு சுமத்தியவர்களின் எண்ணிக்கை தொடர்பாக அறிவிப்புகளில் பல்வேறு விதமாக கூறப்பட்டுள்ளன. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தக் கூடியவர்களின் எண்ணிக்கை 3 என்று கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் மற்றோர் அறிவிப்பில் அம்மக்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து பத்து என்று கூறப்பட்டுள்ளது. இப்னு உயய்னா (ரலி) அவர்கள் அம்மக்களின் எண்ணிக்கை 40 என்று எழுதி இருக்கின்றார்கள். முஜாஹித் அவர்கள் பத்திலிருந்து பதினைந்து வரை என்று எழுதி இருக்கின்றார்கள்.

அவதூறு சுமத்துவதில் இணைந்த மக்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை குறித்து வருகின்றது. அபூதாவூதின் அறிவிப்பில் வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் இரண்டு ஆண்களுக்கும் ஒரு பெண்ணுக்கும் அவதூறு சுமத்தியதற்காக தண்டனையை அறிவித்து கட்டளையிட்டார்கள். அவர்கள் வெட்கக் கேடான விஷயத்தை பேசியிருந்தார்கள். அவர்கள் யார் என்றால், ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் மற்றும் மிஸ்தஹ் பின் உஸாஸா ஆகியோர். நஃபோலி கூறுகிறார்: அந்த பெண் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் ஆவார் என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

அவதூறு சுமத்தியவர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களில் எவருக்கும் கட்டுப்பாடு விதிக்கவில்லை என்று ஒரு கூற்றில் வருகிறது. இன்னொரு கூற்றிலோ பெருமானார் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூல், ஹஸ்ஸான் பின் ஸாபித் மற்றும் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் ஆகியோருக்கு கட்டுப்பாடுகள் விதித்தார்கள் என்று வருகின்றது. இமாம் குர்துபி அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ஸான், மிஸ்தஹ் மற்றும் ஹம்னா ஆகியோர் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன என்பது அறிவிப்புகளில் பிரபல்யமாகவும், ஆலிம்களைப் பொறுத்தவரையில் நன்கு அறியப்பட்டதாகவும் உள்ளது. ஆனால், அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூல் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாக குறிப்பில் காணப்படுவதில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒரு குத்பாவில் இதைக் குறித்து இவ்வாறு கூறியிருந்தார்கள்:

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அவதூறு சுமத்தியதற்காக மூன்று நபர்களுக்கு கசையடி கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் ஹஸ்ஸான் பின் ஸாபித் ஆவார்கள். இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் மாபெரும் கவிஞராக இருந்தார்கள். மற்றொருவர் மிஸ்தஹ் என்பவர் ஆவார். இவர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சிறிய தந்தையாக இருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிற்றன்னையின் மகனாக இருந்தார். இவர் எந்த அளவு ஏழையாக இருந்தார் என்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டில்தான் வசித்து வந்தார். அங்குதான் உணவு உண்டு வந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்தான் இவருக்கு உடைக்கான ஏற்பாடும் செய்து வந்தார்கள். தண்டனையளிக்கப்பட்ட இவர்களுடன் ஒரு பெண்ணும் இருந்தாள். இந்த மூவருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

சூரா அந்நூருடைய 36-ம் வசனத்திற்கு விளக்கமளிக்கும்போது இப்னு ஸூலூலுக்கு கசையடி கொடுக்கப்பட்டது தொடர்பாக எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

لِكُلِّ امْرِئٍ مِّنْهُمْ مَّا اكْتَسَبَ مِنَ الْاِثْمِ

அதாவது அவதூறு சுமத்தியவர்கள் எந்த அளவு (பாவத்தை) சம்பாதித்தார்களோ அதே அளவு அவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டு விடும்.

எவர்களெல்லாம் அவதூறு சுமத்தும் சூழ்ச்சியில் பங்கெடுத்தார்களோ அவர்களுக்கு எண்பது கசையடிகள் கொடுக்கப்பட்டன. மேலும் இறைவன் கூறினான்:

وَالَّذِيْ تَوَلّٰى كِبْرَهٗ مِنْهُمْ لَهٗ عَذَابٌ عَظِيْمٌ

ஆனால் அவர்களில் ஒருவன் எல்லோரையும் விட அதிக விஷமியாக இருந்தான். அவன் இந்த அனைத்து குழப்பங்களுக்கும் தோற்றுனராக இருந்தான். அதாவது அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல். அவனுக்கு நாம் கசையடி கொடுப்பது மட்டுமின்றி நாமே அவனுக்கு தண்டனையும் வழங்குவோம்.

ஆகவே இந்த தண்டனை குறித்த முன்றிவிப்பிற்கேற்ப அவனுக்கு கசையடி தண்டனையும் கொடுக்கப்பட்டது. பிறகு அல்லாஹ்வின் சார்பாகவும் அவனுக்கு தண்டனை கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே கடும் பிரயத்தனங்களை மேற்கொண்ட பிறகு அவன் நாசமாகி போனான்.

இங்கு இவ்விஷயங்கள் நிறைவு பெறுகின்றன. ஜெர்மனி மாநாடு தொடர்பாக இந்த அளவுக்கு மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்; அது என்னவென்றால், மாநாட்டில் வந்திருந்தவர்கள், கலந்து கொண்ட அந்நியர்கள் அல்லது முதன் முதலாக கலந்து கொண்டவர்கள் பெரும் நேர்மறை தாக்கங்களை வெளிப்படுத்தியுள்ளார்கள்; பெரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்கள்; சுற்றுச் சூழலையும் அதிகம் புகழ்ந்துள்ளார்கள். இவ்வாறு இதன் மூலமாக பல மீடியா மூலமாக செய்திகள் மூலமாக பல மில்லியன் மக்கள் வரை அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் உண்மை போதனை சென்றடைந்துள்ளது. மாநாடு இந்த வகையிலும் தப்லீஃக்கிற்கு மிகப் பெரிய

வழிமுறையாக உள்ளது. எங்கு நாம் சென்றடைய முடிவதில்லையோ அங்கு இதன் மூலமாக தப்லீஃக் சென்றடைந்து விடுகிறது; இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடைந்து விடுகிறது. அல்லாஹ் இதற்கு நல்ல மற்றும் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்துவானாக! உண்மையான முறையில் எப்பொழுதும் பயன் பெற்று வரக் கூடிய நல்வாய்ப்பை அஹ்மதிகளுக்கும் வழங்குவானாக!

துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் தனது அருட்கள் மற்றும் கருணைகளின் போர்வையில் எப்பொழுதும் நம்மை போர்த்தி வைப்பானாக!

இறுதியில் நான் ஒரு மர்ஹூமுடைய நற்குறிப்பையும் எடுத்துரைப்பேன். அவர்களின் ஜனாஸாவையும் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ். இமாம் முஹம்மது பைலூ ஸாஹிப் ஆவார்கள். சூடானைச் சார்ந்தவர் ஆவார்கள். கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

சூடானுடைய ஜமாஅத் தலைவர் அவர்கள் மர்ஹூமைக் குறித்து எழுதுகிறார்கள்: மர்ஹூமுடைய பைஅத் சம்பவம் என்னவென்றால், 1966-ம் ஆண்டு நைஜீரியாவில் இருந்து இமாம் ஈஸா அப்துல்லாஹ் பின் லைல் ஸாஹிப் என்ற ஓர் அஹ்மதி இவர்களிடத்தில் விருந்தினராக வந்தார். ஊர் மக்களுக்கு தப்லீஃக் செய்தார்.மர்ஹூம் இமாம் முஹம்மது பைலூ ஸாஹிபுக்கு அனைவரையும் விட முதலில் பைஅத் செய்வதற்கான நற்பேறு கிடைத்தது. அந்நாட்களில் சூடானைச் சேர்ந்தவர்களுக்கு கலீஃபா உடனோ, தலைமையகத்துடனோ தொடர்பு சாத்தியமற்றதாக இருந்தது. எவ்வாறு இருப்பினும், இந்த அஹ்மதிகள் அஹ்மதிய்யத்தில் உறுதியான ஈமானுடன் நிலைபெற்று இருந்தார்கள். அவர்களுக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. இமாம் முஹம்மது பைலூ ஸாஹிப் அவர்கள் அஹ்மதிகளுக்கு தொழ வைத்து வந்தார்கள். அங்கு அஹ்மதிய்யா பள்ளிவாசல் புற்கள், இலை தழைகள் மற்றும் கிளைகளைக் கொண்டு கட்டப்பட்டிருந்தது. ஒரு குடிசையைப் போன்ற பள்ளிவாசலை கட்டினார்கள். அஹ்மதியல்லாதவர்கள் அதை தீயிட்டு கொளுத்தி விட்டார்கள். அஹ்மதிகளை கிராமத்தை விட்டு வெளியேற்றினார்கள். அப்போது இந்த அஹ்மதிகள் தெற்கு பகுதியை நோக்கி ஹிஜ்ரத் செய்து சென்று விட்டார்கள். அங்கும் அவர்கள் இலை தழைகளைக் கொண்டு ஒரு சிறிய பள்ளிவாசலை கட்டினார்கள். அங்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. எதிர்ப்பாளர்கள் அஹ்மதிகளின் பள்ளிவாசலை எரித்தார்கள்; அஹ்மதிகளை அங்கிருந்து வெளியேற்றினார்கள். இந்த அஹ்மதிகளின் ஒரு குழு அங்கிருந்து வெகு தொலைவுக்கு சென்று விட்டது. மற்றொரு குழுவோ தோயம் நகருக்கு சென்று விட்டது. அவர்களுள் இமாம் முஹம்மது பைலூ ஸாஹிபும் இருந்தார்கள். அங்கு அவர்கள் ஜாமிஆ பக்தூர் ரஸா கல்லூரியின் முதல்வராக இருந்த அப்துல்லாஹ் பின் அவஸ் காஸிம் ஸாஹிப் அவர்களிடத்தில் விருந்தினராக இருந்தார்கள். ஆனால் அவர்களின் குடும்பம் எதிர்ப்பு தெரிவித்தது. அந்த அஹ்மதிகளை அங்கிருந்து வெளியேற்றியது. இந்த அப்பாவிகள் வெளியேற்றப்பட்டார்கள். இறுதியில் இவர்கள் நைஜீரியாவில் இருந்த இமாம் ஈஸா அப்துல்லாஹ் பின் லைல் ஸாஹிப் அவர்களிடத்தில் செல்ல முடிவெடுத்தார்கள். அவர்கள் மூலமாகத்தான் இவர்கள் அஹ்மதியாக ஆகியிருந்தார்கள்.

ஆகவே இந்த ஏழை அஹ்மதிகளின் இந்த குழு மனைவி குழந்தைகள் ஆகியோருடன் கழுதைகள் மீதும், விலங்குகள் மீதும் பயணித்து, பெரும்பாலும் கால்நடையாகவே நைஜீரியாவுக்கு புறப்பட்டது. அவர்களிடத்தில் எவ்வித பயண உணவும் இருக்கவில்லை. விஸா உடைய காகிதங்களும் இருக்கவில்லை. பயணத்தின் சிரமங்கள் அதிகம் இருந்தன. ஆனால், ஈமானுடைய செல்வம் மட்டுமே அவர்களிடத்தில் இருந்தது. அவர்கள் தம் நம்பிக்கையை பாதுகாத்துக் கொண்டார்கள். அதே உத்வேகம் மற்றும் ஆர்வத்துடன் ஹிஜ்ரத் செய்து கொண்டே சென்றார்கள். தம் மார்க்கத்தை ஒருபோதும் இவர்கள் தியாகம் செய்யவில்லை. இறுதியில் இவர்கள் நைஜீரியா சென்றடைந்தார்கள். அங்கு இமாம் ஈஸா பின் லைல் ஸாஹிப் அவர்களிடத்தில் 13 வருடங்கள் இருந்தார்கள். அதற்குப் பிறகு இமாம் ஈஸா ஸாஹிப் அவர்கள் ஒரு கனவின் அடிப்படையில் இவர்களை சூடானுக்கு திரும்பிச் செல்லுமாறு ஆலோசனை கூறினார்கள். இந்த விஷயம் அவர்களுக்கு பிடிக்கவில்லை. ஆனால், இமாம் ஈஸா ஸாஹிப் அவர்களோ, இது நம் இறைவன் சார்பாக வந்திருக்கும் கட்டளையாக தெரிகிறது என்று கூறினார்கள். ஆகவே இந்த மக்கள் விருப்பம் இல்லாமல் சூடானுக்கு புறப்பட ஒப்புக் கொண்டார்கள். இந்த மக்கள் மூன்று வருடங்களுக்குப் பிறகு திரும்ப சூடானுக்கு செல்ல வேண்டும் என்று இமாம் ஈஸா ஸாஹிபுக்கு கனவில் கூறப்பட்டிருந்தது. மூன்று வருடங்கள் முடிந்த பிறகு இந்த அஹ்மதி முஹாஜிர்கள் திரும்ப தம் ஊரை நோக்கி புறப்பட்டார்கள். எல்லாரையும் விட முதலில் இமாம் முஹம்மது பைலூ ஸாஹிப் திரும்பிச் சென்றார்கள். சூடானில் இவர்கள் தம் ஊரான கணீஸாவுக்கு சென்று தங்கினார்கள். இது 2010-ல் நடந்த விஷயமாகும். இந்த அஹ்மதிகள் சூடானுக்கு திரும்பிச் சென்ற பிறகு நைஜீரியாவில் போகோ ஹராம் என்ற பெயர் கொண்ட இயக்கம் தோன்றியது. இந்த சூடானிய அஹ்மதிகள் அப்போது நைஜீரியாவில் இருந்திருந்தால் இந்த அமைப்பு அவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டிருக்கும் என்பதை இறைவனே நன்கறிவான். நைஜீரியாவில் இருந்து அவர்கள் திரும்புவதில் இறைஞானம் மறைந்திருந்தது என்பது அப்போதுதான் அவர்களுக்கு தெரிந்தது.

எவ்வாறு இருப்பினும் கணீஸா என்ற ஊருக்கு திரும்பி வந்த பிறகு அவர்களுக்கு மீண்டும் கடும் எதிர்ப்பை சந்திக்க நேர்ந்தது. அவர்கள் கட்டிய சிறிய பள்ளிவாசல் மீண்டும் எரிக்கப்பட்டது. அவர்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன. அவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டன. அவர்கள் மீண்டும் ஊரை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். இறுதியாக, தற்போது நடக்கும் போர் ஆரம்பித்தது. சூடானுடைய முழு நாட்டின் நிலைமையும் பாதுகாப்பாக இல்லை. இந்த அஹ்மதிகளும் தம் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக அமைதியை விரும்பி சூடானுடைய பல்வேறு பகுதிகளில் இந்த மக்கள் பெரும் நெருக்கடியுடன், ஏழ்மையுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடைய அந்தஸ்தை உயர்த்துவானாக! பாவமன்னிப்பை வழங்குவானாக. மற்ற அஹ்மதிகளின் ஈமானை உறுதிப்படுத்துவானாக. அல்லாஹ் அவர்களின் சூழ்நிலையை மாற்றுவானாக! நான் கூறியது போன்று அந்நாட்டில் பெரும் குழப்பம் பரவியுள்ளது. அல்லாஹ் இந்த குழப்பத்தையும் முடிவுக்கு கொண்டு வருவானாக. அல்லாஹ் அந்த மக்கள் மீது கருணை காட்டுவானாக. அவர்கள் பரஸ்பரம் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆவார்களாக! ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமிற்கு சகோதரர் ஆவார் என்ற அடிப்படையில் முஸ்லிம்கள் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆவார்களாக! இஸ்லாமிய ஆட்சியில் இருக்கக் கூடிய குழப்பங்களை அல்லாஹ் நீக்குவானாக. உண்மையான முறையில் அமைதியுடனும், நிம்மதியுடனும் வாழ்வை கழிக்கக் கூடிய நல்வாய்ப்பை அஹ்மதிகளுக்கு வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி APA. தாரிக் அஹ்மத்

* * * * * * *

**நல்லடியார்களுடன் இறைவன் நடந்து கொள்ளும் முறை**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மையில் அந்த இறைவன் மிக்க வல்லவனும், ஆற்றல் மிக்கவனும் ஆவான். அவனிடம் நேசத்துடனும், நன்றியுடனும் நடப்பவர்கள் ஒருபோதும் வீணாக மாட்டார்கள். எதிரி தன் சூழ்ச்சிகளால் அவர்களை அழித்து விடுவேன் என கூறுகின்றான். தீய நோக்கம் உடையவர்கள் அவர்களை நசுக்கிவிட எண்ணுகின்றனர். ஆனால், இறைவன் கூறுகின்றான்:

அறிவிலியே! நீ என்னுடன் மோதுவாயா? என் அன்பிற்குரியவரை இழிவுபடுத்த முடியுமா? உண்மையில், வானத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவை தவிர பூமியில் எதுவும் நிகழாது. உலகில் உள்ள எந்தக் கையும் வானத்தில் தீர்மானிக்கப்பட்ட அளவே அன்றி நீள முடியாது. எனவே அநீதிக்கான திட்டங்களைத் தீட்டுபவர்கள் மிக அறிவிலிகளே ஆவர். அவர்கள் தங்களின் வெறுக்கத் தக்க, வெட்கமில்லாத திட்டங்களை தீட்டியபோது, மிக மேலான இறைவனை மறந்து விட்டனர். அவனுடைய நாட்டமின்றி ஓர் இலை கூட உதிராது. எனவே அவர்கள் தங்கள் திட்டங்களில் எப்போதும் தோல்வியுற்றவர்களாகவும், வெட்கித் தலைகுனிந்தவர்களாகவும் இருக்கின்றனர். மேலும் அவர்களின் தீங்கினால் நல்லடியார்களுக்கு எந்த இழப்பும் ஏற்படுவதில்லை. மாறாக இறைவனின் அடையாளங்கள் பரவலாக வெளிப்படுகின்றன. இறைவனை பற்றிய மக்களின் ஞானம் வளர்கிறது. ஆற்றல் மிக்க வல்லவனாகிய அந்த இறைவன் புறக் கண்ணுக்குப் புலப்படுவதில்லை என்றாலும் அவன் தன் அற்புதமான அடையாளங்களால் தன்னை வெளிப்படுத்துகிறான். (கிதாபுல் பரிய்யா, முன்னுரை, பக் -19 -20)

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) **அவர்களின் ஐரோப்பிய சுற்றுப் பயணம்**

## ஜெர்மனி - 2012

**எம் டி. ஏ ஜெர்மனியின் ஊழியர்களின் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடனான சந்திப்பு**

**டிசம்பர் 16 2012 ஞாயிற்றுக்கிழமை**

**எம்.டி.ஏ வில் லட்சக்கணக்கான பவுண்ட்கள் செலவிடப்படுகின்றன. அவ்வாறிருந்தும் எந்த விளைவும் வெளிப்படவில்லையென்றால் எந்தப் பயனும் கிடையாது. பெரியவர்கள் ஓரளவிற்கு கேட்டு விடுகின்றனர்; பயனடைந்து விடுகின்றனர். ஆனால், இந்த நாடுகளில் வளர்ந்து வருகின்ற இளம் தலைமுறையினர் இருக்கின்றனர்; குழந்தைகள் இருக்கின்றனர்; அல்லது இளைஞர்கள் ஆகிக் கொண்டிருக்கும் பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களுக்காக ஒன்று, அவர்களின் இயல்பிற்கு ஏற்றவாறு நிகழ்ச்சிகள் வரவேண்டும்; மேலும் பின்னர் எல்லா மட்டத்திலும், எல்லா வகையான அமைப்புகள் மூலமாகவும் இந்த குறிப்பான நேரத்தில் ஜெர்மன் நிகழ்ச்சிகளையே வீடுகளில் கேட்பதன் பக்கம் கவனமூட்ட வேண்டும்**

**எவர்களிடம் டிஷ் இல்லையோ ; அவர்கள் யூடியூபில் பார்த்துக் கொள்ள வேண்டும். தற்போதோ எப்படிப்பட்ட gadgets கள் தயாராகி விட்டன என்றால் அவற்றை நீங்கள் இன்டர்நெட்டுடன் இணைத்து விடுகின்றீர்கள். மேலும் நீங்கள் அந்த நிகழ்ச்சியை இன்டர்நெட்டில் காண முடியும். டெலிவிஷனில் பார்க்க முடியும். எனவே அந்த நிகழ்ச்சியை நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்தீர்கள் என்றால் பின்னர் முழு குடும்பத்தினரும் பார்க்க முடியும்**

**நான் கண்ட விஷயங்களின் அடிப்படையில் அல்லாஹ்வின் அருளினால் உலகில் உள்ள குத்தாமுல் அஹ்மதிய்யாவின் மஜ்லிஸ்களில் குத்தாமுல் அஹ்மதிய்யா ஜெர்மனி உலகின் சிறந்த மஜ்லிஸாக கணக்கிடப்பட முடியும்**

**நீங்கள் நினைவிற் கொள்ள வேண்டும்; அதாவது குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஒவ்வொரு மட்டத்திலும் இருக்கின்ற பொறுப்பாளர்கள் தமது ஊழியர்களிடம் அல்லது காதிம்களிடம் பணி பெறுகின்ற போது அன்பு மற்றும் நேசத்துடன் பணி வாங்க வேண்டும்**

**நான் கடந்த செயற்குழு கூட்டத்தில் சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யாவிடம் இதனை கூறியிருந்தேன். அதாவது இளைஞர்களின் சீர்திருத்தமின்றி சமுதாயங்களின் சீர்திருத்தம் நடைபெற முடியாது என்ற குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முழக்கத்தின் பேட்ஜ் (BADGE) ஐ நீங்கள் தயாரிக்க வேண்டும்**

இன்று மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஜெர்மனி தனது முன்னாள் சத்ர் மஜ்லிஸிற்கு விடை கொடுப்பதற்காகவும், புதிய சத்ர் மஜ்லிஸை வரவேற்பதற்காகவும் இஷாயியா நிகழ்ச்சி ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தது.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்தார்கள்.

நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. அன்பிற்குரிய ஸாதிக் அஹ்மத் பட் ஸாஹிப் திலாவத் ஓதினார்கள். அதன் பிறகு அன்பிற்குரிய கமால் அஹ்மத் ஸாஹிப் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடைய நவ்னே ஹாலானே ஜமாஅத் முஜே குச் கஹ்னா ஹே என்று ஆரம்பமாகும் கவிதை வரிகளில் சில கவிதை வரிகளை தேர்ந்தெடுத்து அழகிய குரலில் பாடினார். அதன் பிறகு ஹுஸுர் அன்வர் அவர்கள் காதிம்களுக்கு மத்தியில் உரை நிகழ்த்தினார்கள். மேலும் முக்கிய வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

**ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யா ஜெர்மனியின் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையும் முக்கிய வழிகாட்டல்களும்**

**தஷஹ்ஹுதும், தஊதும் தஸ்மியாவும் ஓதிய பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் :**

இன்றைய இந்த நிகழ்ச்சியானது மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஜெர்மனியின் சார்பாக ஹாஃபிழ் முஸஃபர் இம்ரான் ஸாஹிப் அவர்களை கௌரவிப்பதற்காக நடந்து கொண்டிருக்கின்றது. அவர் கடந்த ஆறு ஆண்டு காலத்தில் ஜெர்மனியின் சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருந்திருக்கின்றார். மேலும் தனது term ஐ முழுமை செய்திருக்கின்றார். பொதுவாக (பொறுப்பிலிருந்து விடை பெற்று) செல்லக் கூடியவரை கண்ணியப்படுத்தும் விதமாக நடத்தப்படும் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் முதலில் புதிதாக பொறுப்பில் அமரக் கூடியவர் தனது அறிக்கையை சமர்ப்பிப்பார். சில விஷயங்களை குறிப்பிடுவார்; மேலும் விடைபெறக் கூடியவரைக் குறித்து சில கருத்துகளை வெளிப்படுத்துவார். மேலும் பின்னர் விடை பெற்று செல்லக் கூடிய பொறுப்பாளர் சில கருத்துகளை வெளிப்படுத்துவார். ஜமாஅத்தில் இந்த மரபும் இருக்கின்றது. அதாவது அல்லாஹ்விற்கு நன்றி தெரிவிக்கப்படுகின்றது.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

விதிமுறைப்படி இன்று முதலில் உங்களுடைய புதிய சத்ர் ஸாஹிப் சார்பாக உரை நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும். பின்னர் விடை பெற்றுச் செல்லக் கூடிய முன்னாள் சத்ர் ஸாஹிப் சார்பாக கருத்தோ அல்லது நன்றி கூறுவதற்கான உரையோ இருந்திருக்க வேண்டும். ஆனால், முதல் காரணம் நேரம் இல்லாதது; மற்றொன்று மரபை மாற்றும் விதமாக நான் அவர்களிடம் கூறியிருந்தேன். அதாவது இங்கு வந்து இருவரும் கருத்து கூறும் நிகழ்ச்சியை விட்டு விடுங்கள் என்று கூறியிருந்தேன். நானும் கூட குறைவாகவே பேசுவேன் என்றும் கூறியிருந்தேன். நானே சில விஷயங்களை உங்களுக்கு கூறுவேன். ஏனெனில், செல்லக் கூடியவரைக் குறித்து கருத்துகளை வெளிப்படுத்தும் போதோ சிலமுறை உலகியல் தாக்கமும் நம் மீது மேலோங்கி விடுகின்றது. எனவே மிகைப்படுத்துதல் துவங்கி விடுகின்றது. செல்லக் கூடியவரின் பணியை பாராட்டுவதும், apperciate செய்வதும் மிகவும் நல்ல விஷயம் ஆகும். மேலும் அவ்வாறு செய்யவும் வேண்டும்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: குத்தாமுல் அஹ்மதிய்யாவின் புதிய சத்ர் முன்னாள் சத்ருடைய பணிகளை appreciate செய்து பாராட்டி அவருடைய தொண்டுகளை குறிப்பிடுவதற்கு பகரமாக சில மிகைப்படுத்தக் கூடிய சொற்களும் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும். எனவே நானே ஹாஃபிழ் முஸஃபர் இம்ரான் ஸாஹிப் சத்ர் ஆக இருந்த காலகட்டத்தை நானே குறிப்பிடுவதை உகந்ததாகக் கருதினேன்.

அல்லாஹ்வின் அருளினால் அவர் தனது ஆறு ஆண்டு கால சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காலத்தை மிகவும் அழகிய முறையில் நிர்வகித்தார். தர்பிய்யத் ரீதியிலும் மிகவும் நல்ல முறையில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தார். ரிப்போர்ட்களை பொருத்த வரை ஒன்றிரண்டு இஜ்திமாக்களில் கலந்து கொண்டதற்கு பிறகு, நான் கண்ட விஷயங்களின் அடிப்படையில் அல்லாஹ்வின் அருளினால் உலகில் உள்ள குத்தாமுல் அஹ்மதிய்யாவின் மஜ்லிஸ்களில் குத்தாமுல் அஹ்மதிய்யா ஜெர்மனி உலகின் சிறந்த மஜ்லிஸாக கணக்கிடப்பட முடியும். இது நிச்சயமாக ஒரு நபரின் பணியல்ல. சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யா எவ்வளவு தான் நல்லவராக இருந்தாலும், எவ்வளவுதான் efficent ஆக இருந்தாலும், தூய்மையை

வெளிப்படுத்தக் கூடியவராக இருந்தாலும் அவரது குழு அவருடன் முழு கவனத்துடன் பணி செய்யக் கூடியதாக இல்லாத வரை பணி முன்னோக்கி செல்ல முடியாது. பின்னர் தலைமையக மற்றும் நேஷனல் லெவல் குழு மட்டும் அவ்வாறு இருந்தால் போதாது. மாறாக, மண்டல காயித்மார்கள் இருக்கின்றனர்; உள்ளூர் காயித்கள் இருக்கின்றனர்; உள்ளூர் மஜ்லிஸ்கள் இருக்கின்றன ; இவர்கள் அனைவரும் அழகிய முறையில் தங்களது பொறுப்புகளை புரிந்தவாறு பணி செய்ய முயற்சி செய்யும் போதும், தங்களது பணியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு முயலும் போதுதான் அதன் நல்ல விளைவுகள் உருவாகும். அடுத்து அப்படிப்பட்ட ஒரு குழுவை உருவாக்குவதும், அந்தக் குழுவை அழைத்துச் செல்வதும் நிச்சயமாக பெரும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் ஆகும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: பின்னர் ultimately விஷயம் அங்கேயே சென்றடைந்து விடுகின்றது. அதாவது உயர் அதிகாரி எப்படிப்பட்டவர் ஆவார்? ஆக, ஜமாஅத் அமைப்பில் எந்தவொரு துறையும், அதன் பணி செய்யக் கூடிய ஊழியர்களும், மேலே நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் அதிகாரியும் அதில் ஸயீம் இருக்கின்றார்; நாஸிம் இருக்கின்றார்; காயித் இருக்கின்றார்; முஃதமீம் இருக்கின்றார்; சத்ர் இருக்கின்றார்; இவர்கள் அனைவரும் நல்ல முறையில் பணி செய்து கொண்டிருக்கும் போதும், மேலும் எவரிடம் பணி பெற வேண்டுமோ அவரிடமிருந்து பணி வாங்கினால் பின்னர் அந்நிலையில் தான் அந்தத் துறை ஒரு டீம்வொர்க்கின் கீழ் முன்னேற்றத்திற்குரிய படித்தரங்களை கடக்க முடியும். ஆக, எவ்வாறு இருப்பினும், இந்த அடிப்படையில் ஹாஃபிழ் முஸஃப்பர் இம்ரான் ஸாஹிப் மிகவும் நல்ல பணி செய்திருக்கின்றார்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அடுத்து, இதுவும் அவருடைய ஒரு சிறப்பாகும். மேலும் அந்த சிறப்பை இதுவரை புதிய சத்ர் ஸாஹிபும் மேற்கொண்டு வருகின்றார். அதாவது குத்தாமுல் அஹ்மதிய்யாவின் எந்தவொரு உறுப்பினருடைய வீட்டில் அல்லது அவருக்கு அல்லது அவரது உறவினர்களுக்கு எந்தவொரு வேதனையும் ஏற்பட்டால் பின்னர் அவரிடமிருந்து எனக்கு உடனடியாக கடிதம் வந்து விடுகின்றது. இன்ன இன்ன நபர்களுக்கு இன்ன தேவை அல்லது துன்பம் இருக்கின்றது; அவருக்காக துஆ செய்யுங்கள் என்று கடிதம் வந்து விடுகின்றது. சம்பந்தப்பட்ட நபரின் கடிதம் பிறகு தான் வந்தது; மேலும் (இவர்) புறமிருந்து முன்னரே தகவல் கிடைத்து விடுகின்றது. ஆக, இது நமது அதிகாரிகள் மற்றும் தொண்டாற்றக் கூடியவர்களிடம் நிலைபெற்றிருக்க வேண்டிய மாபெரும் நல்ல உயிரோட்டம் ஆகும். நம்மிடம் அதிகாரிகள் இல்லை. நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு பொறுப்பாளரும் அவர் மற்றவரின் பார்வையிலோ பொறுப்பாளர் ஆவார்; ஆனால், அவர் அவரது சொந்தப் பார்வையில் தொண்டராக இருக்க வேண்டும்; ஏனெனில், ஹதீஸில் இவ்வாறே வந்துள்ளது. அதாவது சமுதாயத்தின் தலைவர் சமுதாயத்தின் சேவகர் ஆவார். தொண்டிற்கான இந்த உணர்வு உங்களுக்கு முன்னால் இருக்கும் போதுதான் ஓர் அதிகாரத் தோரணையிலிருந்து விலகி ஒரு தொண்டராக பணி செய்யக் கூடியவராக இருப்பார். மற்றவர்களிடம் அழகிய முறையில் நடக்கக் கூடியவராக இருப்பார். எவ்வித திகிலிலும், அழுத்தத்திலும் பணி செய்ய வைக்காமல் நட்பு ரீதியிலான சூழலில் பணி செய்ய வைப்பவராக அவர் இருப்பார்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமும் அல்லாஹ் இதனையே கூறினான்: அதாவது, மென்மை, அன்பு மற்றும் நேசம் மட்டுமே நம்பிக்கையாளர்களை உம்மைச் சுற்றி ஒன்று கூட்டி வைத்துள்ளது. ஒருவேளை கடுமையான இயல்பு இருந்திருந்தால், கடும் சினம் இருந்திருந்தால் பின்னர் ஒருபோதும் இந்த மக்கள் ஒன்றாக இருந்திருக்க மாட்டார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஓர் உயரிய அந்தஸ்து இருந்தது. அன்னாரோ நபியாக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடைய கோபத்திலும் கூட எப்படிப்பட்ட அருள் செய்யக் கூடியவனாக இருந்தான் என்றால் மக்கள் ஒன்று கூடியிருப்பார்கள். ஆனால், நமக்கு இதில் உள்ள பாடம் என்னவென்றால், நாம் எப்படியிருப்பினும், நமது ஒவ்வொரு பணி செய்யக் கூடியவரிடமும் அன்பு மற்றும் நேசத்தை கைகொள்ள வேண்டும். எனவே தற்போது எனக்கு முன்னால் பொறுப்பாளர்களில் பெரும்பாலார் அமர்ந்திருக்கின்றீர்கள். நீங்கள் நினைவிற் கொள்ள வேண்டும்; அதாவது குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஒவ்வொரு மட்டத்திலும் இருக்கின்ற பொறுப்பாளர்கள் தமது ஊழியர்களிடம் அல்லது காதிம்களிடம் பணி பெறுகின்ற போது அன்பு மற்றும் நேசத்துடன் பணி வாங்க வேண்டும்.

மேலும் இந்த அன்பையும், நேசத்தையும் எந்த அளவுக்கு நீங்கள் பரப்ப வேண்டும் என்றால், எவ்வாறு ஒரு பிள்ளை நிர்ப்பந்தத்திற்குள்ளாகி தாய், தந்தையருக்கு தொண்டாற்றுவதற்கு தயாராகி விடுகின்றதோ அதேபோன்று ஒவ்வொரு காதிமும் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதற்காக போட்டி போட்டுக் கொண்டு முன்னால் வருபவராக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளினால் இந்த உயிரோட்டம் பெரும்பாலும் ஜமாஅத்தில் காணப்படுகின்றது. அதாவது அவர்கள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு எந்நேரமும் தயாராக இருக்கின்றார்கள்; எல்லா தியாகங்களுக்காகவும் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், இந்த உயிரோட்டத்தை நிலைநிறுத்தி வைப்பது ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் கடமையாகும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

ஆக, (பொறுப்பிலிருந்து) விடை பெற்று செல்லக் கூடிய சத்ர் மஜ்லிஸைக் குறித்து நான் கூற வேண்டிய சில விஷயங்களாக இவை இருந்தன. அல்லாஹ்வின் அருளினால் அவர் சிறப்பாக பணியாற்றினார். அல்லாஹ் அவருக்கு நற்கூலியை வழங்குவானாக!மேலும் எதிர்காலத்தில் அவரிடம் என்ன ஜமாஅத் பொறுப்பு கொடுக்கப்பட்டாலும் அதனையும் சிறந்த முறையில் நிறைவேற்றக் கூடியவராக அவர் திகழட்டுமாக! மேலும் புதிய சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யா இருக்கின்றார்; அவருக்கும் முன்பை விட அதிகமாக இந்தப் பணியை முன்னெடுத்து செல்லக் கூடிய நற்பேறை அல்லாஹ் வழங்குவானாக!

ஏனெனில், முன்னேறும் சமுதாயங்கள் ஓர் இடத்தை அடைந்து நின்று விடுவதில்லை. முன்னேற்றத்திற்கான பாதைகள் எப்போதும் திறந்தே இருக்கின்றன. உயர் நோக்கங்களை கொண்ட இலக்குகளின் எல்லைகள் முன்னால் தென்படுகின்றன. மேலும் முன்னேற்றம் அடையக் கூடிய மக்களுக்கு அந்த இலக்கு தென்படவும் வேண்டும். அப்போதுதான் அவற்றை சென்றடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். எனவே இந்த பணியை முன்னெடுத்து செல்வது புதிய சத்ர் ஸாஹிபுடைய பணியாகும். இவர் அதனை முன்னெடுத்து செல்லக் கூடியவராக இருப்பதற்கு அல்லாஹ் இவருக்கும் நற்பேறை வழங்குவானாக.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் நஸ்ம் (உருது கவிதையை) செவியுற்றீர்கள். ஒவ்வொரு பொறுப்பாளரும் இந்த உருது பாடலில் உள்ள தூதுச் செய்தியை நினைவிற் கொள்ள வேண்டும். அஹ்மதிய்யத்தின் ஒவ்வொரு தொண்டரின் மீதும் இது கடமையாகும்.

நான் கடந்த செயற்குழு கூட்டத்தில் சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யாவிடம் இதனை கூறியிருந்தேன். அதாவது இளைஞர்களின் சீர்திருத்தமின்றி சமுதாயங்களின் சீர்திருத்தம் நடைபெற முடியாது என்ற குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முழக்கத்தின் பேட்ஜ் (BADGE) ஐ நீங்கள் தயாரிக்க வேண்டும்; மேலும் ஒவ்வொரு காதிமுடைய மார்பிலும் அதனை மாட்டி விட வேண்டும். அப்போதுதான் அவர்கள் தானும் நினைவில் கொள்வார்கள். மேலும் நாம் நம்மையும் சீர்திருத்தம் செய்ய வேண்டும்; மேலும் ஜமாஅத் உறுப்பினர்களையும் சீர்திருத்தம் செய்ய வேண்டும் ; மேலும் சமுதாயத்தையும் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று அவர்கள் ஒருவர்

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

மற்றவரை பார்க்கும்போதும் நினைவு வந்து கொண்டிருக்கும். மேலும் ஒவ்வொருவருடைய சீர்திருத்தத்திற்காக நாம் நமது முன்மாதிரியை நிலைநாட்ட நேரிடும் என்ற உணர்வும் அவர்களுக்கு ஏற்படும். இந்த விஷயங்கள் முன்னால் இருக்கும் போது பின்னர் எப்படிப்பட்ட ஒரு தலைமுறை தோன்றும் என்றால், அது இன்ஷா அல்லாஹ் புரட்சியை கொண்டு வரக் கூடியதாக இருக்கும். எனவே இந்த பொறுப்பை உணர்வதன் பக்கம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கவனமூட்டியுள்ளார்கள். இந்த உணர்வை ஒவ்வொரு காதிமும் தமது கருத்தில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணி ஒன்றும் சிறிய பணி அல்ல. இஸ்லாத்தின் மறுமலர்ச்சி ஆகும். நாம் உலகை சரியான மற்றும் உண்மையான இஸ்லாத்தின் பக்கம் அழைக்க வேண்டும். நாம் சுயமே அதன் நுட்பமான வழிகளில் சென்று அதன் படி அமல் செய்யக்கூடியவர்களாக ஆகாத வரையிலும் அதனை கற்பவர்களாக ஆகாத வரையிலும் அந்த பணி சாத்தியமில்லை; மேலும் அதனை பரப்புவதற்கான ஓர் உத்வேகமும் நமது உள்ளங்களில் உருவாகாது; எனவே இதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அடுத்து தொழுகையை நிறைவேற்றுதல் இருக்கின்றது. திருக்குர்ஆன் திலாவத் இருக்கின்றது. ஐவேளை தொழுகைகளை தொடர்ந்து நிறைவேற்றுவதும், இயன்ற வரை ஜமாஅத்தாக தொழுகைகளை நிறைவேற்றுவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இது பொறுப்பாளர்களுக்கு மிகவும் கட்டாயமாகும். ஒருவேளை ஏதாவது நிர்பந்தத்தின் காரணமாக அது முடியவில்லை என்றால் பின்னர் எந்நிலையிலும் குறித்த நேரத்தில் (தனியாவாவது) தொழுது விட வேண்டும். குளிர்காலத்தில் ஸுஹர், அஸர் தொழுகைகள் ஜமுஆ செய்யப்படுகின்றன. எனவே இங்கு காலநிலையின் அடிப்படையில் சரிதான். ஆனால், மற்ற தொழுகைகள் உரிய நேரத்தில் தொழப்பட வேண்டும். அதற்காக ஒவ்வொரு காதிமும், எந்தவொரு மட்டத்திலும் இருக்கும் பொறுப்பாளரும் இதற்காக முயற்சி செய்து வர வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

எனவே இந்த விஷயங்களை நினைவிற் கொள்ளுங்கள்; அதாவது அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்க வேண்டும். மேலும் தன்னலமின்றி மார்க்கத் தொண்டிற்காக தம்மைத் தாமே முன் நிறுத்த வேண்டும். குத்தாமுல் அஹ்மதிய்யாவில் இந்த உயிரோட்டம் உருவாகிவிட்டால் மேலும் இந்த உயிரோட்டம் நிலை பெற்று விட்டால் மேலும் எல்லா மட்டத்திலும் நிலைபெற்று விட்டால் இன்ஷா அல்லாஹ் பின்னர் இந்த விஷயத்தைப் பற்றிய கவலை இருக்காது. அதாவது நமது நோக்கத்தை அடைய விடாமல் தடுக்கும் சந்தர்ப்பம் உருவாகிவிடுமோ என்ற கவலை ஏற்படாது. மாறாக காலத்தின் கலீஃபா கவலையற்றவராக ஆகிவிடுவார். அதாவது ஜமாஅத் உறுப்பினர் குறிப்பாக இளைஞர்கள் தமது கரங்களாக மாறி; வலது கரமாக திகழ்ந்து ஒவ்வொரு கடினத்தையும் கடப்பதற்கு தகுதியுடையவராக இருப்பார்; மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எந்த மிஷனை எடுத்துக் கொண்டு தோன்றியுள்ளார்களோ அதனை உலகில் பரப்பக் கூடியவர்களாக இருப்பார்கள் என்று காலத்தின் கலீஃபா நிம்மதியாக இருப்பார். எனவே இந்த அடிப்படையிலும் பொறுப்பாளர்கள் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது அவர்கள் மீது பெரும் பொறுப்புகள் இருக்கின்றன என்பதை அவர்கள் உணர வேண்டும். எல்லாரையும் விட அவர்கள் முதலில் தமது முன்மாதிரியை நிலைநாட்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும்; பின்னர் அவர்களால் காதிம்களுக்கும் கூற முடியும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

மற்றொரு விஷயம் இருக்கின்றது. அதாவது இந்த சமூகத்தில் மீடியா, இன்;ர்நெட், டெலிவிஷன் போன்றவற்றின் நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவற்றில் ஏராளமான வீணான விஷயங்கள் இருக்கின்றன. இந்த வீணான விஷயங்களில் இருந்து தப்பிப்பதற்கு நீங்களும் முயற்சி செய்யுங்கள்; மேலும் ஒவ்வொரு காதிமும் தப்பிக்கூடியவராக இருப்பதற்கும் தேவையான நிகழ்ச்சிகளை வடிவமையுங்கள். மேலும் அதற்கு மாற்றாக அவர்களுக்கு மார்க்கத்தில் ஆர்வம் உருவாகும் வகையிலான நிகழ்ச்சிகளை அவர்களுக்கு வழங்குங்கள். மேலும் அவர்களுக்கு மார்க்க அறிவை கற்பதற்கு ஆர்வம் உருவாக வேண்டும். மேலும் அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்குவதில் ஆர்வம் உருவாக வேண்டும். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அதற்கான நற்பேறை வழங்குவானாக!

இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த நிகழ்ச்சியின் முடிவில் துஆ செய்து வைத்துள்ளார்கள்.

இதன் பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்பாளர்களும், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கண்ணியத்திற்குரிய விருந்தினர்களும் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் விருந்தில் கலந்து கொண்டு உணவு அருந்தினர். இந்த நிகழ்ச்சியின் முடிவில் 9.30 மணியளவில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு புறப்பட்டு சென்று விட்டார்கள்.

டிசம்பர் 17, ஞாயிற்றுக் கிழமை 2012

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 7.15 மணியளவில் பைத்துஸ் ஸுபூஹ் மஸ்ஜிதில் ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள்.தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு புறப்பட்டுச் சென்று விட்டார்கள்.

**ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தின் திறப்பு**




**விழா**

இன்று நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப Riedstadt நகரத்தில் ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழா நிகழ இருந்தது. Riedstadt நகரம் 117 வருடங்கள் பழைய ஒரு வரலாற்று நகரமாகும். மேலும் 22 ஆயிரம் நபர்களை தன்னுள் கொண்டுள்ளது. அதில் பல்வேறு வகையான 83 சமுதாயங்களை சார்ந்த மக்களும் வசிக்கின்றனர். பரப்பளவில் அடிப்படையில் GROOS - Gerau மாவட்டத்தில் இது மாபெரும் நகரம் ஆகும். பைத்துஸ் ஸுபூஹ் ஃபிராங்ஃபர்ட்டிலிருந்து இதன் தொலைவு 57 கி.மீ ஆகும். 1985-ம் ஆண்டு இங்கு வந்து சில அஹ்மதிகள் வசிக்கத் துவங்கிய போது ஜமாஅத்தின் அறிமுகம் இந்த நகரத்தில் ஏற்பட்டது. செப்டம்பர் 1987-ம் ஆண்டில் இங்கு முறையாக ஜமாஅத் நிறுவப்பட்டது. இங்குள்ள உள்ளூர் ஜமாஅத்திற்கு பைத்துல் அஸீஸ் என்ற பள்ளிவாசலை கட்டுவதற்கு நற்பேறு கிடைத்தது. இந்த பள்ளிவாசலை ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆகஸ்ட் 30, 2004-ம் ஆண்டு திறந்து வைத்தார்கள்.

இந்த பைத்துல் அஸீஹ் என்ற பள்ளிவாசலுடன் இணைந்திருக்கின்ற, 5700 முரப்பஃ மீட்டர் பரப்பளவு கொண்ட பிளாட்டும் இருக்கின்றது. 2008-ம் ஆண்டு ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் யூரோ பவுண்டகள் கொடுத்து விலைக்கு வாங்கப்பட்டது. அக்டோபர், 2008-ம் ஆண்டு Riedstadt நகரத்தில் ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனிக்கான வரைபடத்திற்கு ஒப்புதல் கிடைத்தது. மஸ்ஜித் அஸீஸிற்கு வளாகத்தில் இருக்கின்ற நிலத்தை சேர்த்து மொத்த பரப்பளவு 8300 முரப்பஃ மீட்டர் ஆகும்.

டிசம்பர் 15, 2009-ம் ஆண்டு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது ஜெர்மனி சுற்றுப் பயணத்தின் போது ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனிக்கான அடிக்கல் நாட்டினார்கள். பிப்ரவரி 1-ம் தேதி, 2010-ம் ஆண்டு முறையாக கட்டுமானப் பணி துவங்கியது. இந்த பிளாட்டின் கிழக்குப் பகுதியில் இரண்டு அடுக்கு மஸ்ரூர் ஹாஸ்டல் கட்டடம் உள்ளது. மேலும் மேற்குப் பக்கத்தில் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் கல்வி கற்பிக்கும் கூடம், நிர்வாகக் விவகாரங்கள்,அலுவலகங்கள் மற்றும் நூலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய இரண்டு அடுக்கு கட்டடம் இருக்கின்றது.

ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் இந்த புதிய கட்டடத்தில் வகுப்பறைகள் இருக்கின்றன. இரண்டு பெரிய ஹால்கள் இருக்கின்றன ; நூலகம் இருக்கின்றது. கணினி அறை இருக்கின்றது; முதல்வரின் அறை இருக்கின்றது; மேலும் ஸ்டாஃப் ரூம் இருக்கின்றது. அதுமட்டுமின்றி ஏனைய நிர்வாக அலுவலகங்களும் இருக்கின்றன. ஒரு பெரிய சமையலறையும் டைனிங் ஹாலும் இருக்கின்றது. பல்வேறு தரப்பட்ட கேலரீஸும் Lobbies -ம் இருக்கின்றன.

மஸ்ரூர் ஹாஸ்டலுடைய இரண்டு அடுக்கு கட்டடத்தில் தற்போது பெரிய அளவில் தற்போது 31 அறைகள் இருக்கின்றன. மேலும் ஒரு பெரிய ஹால் காமன் ரூம் என்ற வகையில் அமைந்துள்ளது. அங்கு Indoor விளையாட்டுக்களுக்கான ஏற்பாடு உள்ளது.

ஒரு பகுதியில் லான்டரி ரூமும் இருக்கின்றது. மாணவர்களுடைய விளையாட்டிற்காக ஃபுட்பால் மற்றும் பாஸ்கட் பால் போன்றவற்றிற்காகவும் ஓரிடம் தயார் செய்யப்பட்டுள்ளது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 10.15 மணியளவில் தமது தங்குமிடத்தில் இருந்து வெளியில் வருகை தந்தார்கள். மேலும் Riedstadt நகரத்திற்கு செல்வதற்காக புறப்பட்டார்கள். சுமார் 45 நிமிட பயணத்திற்கு பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு வருகை தந்தார்கள். மதிப்பிற்குரிய ஷம்ஷாத் அஹ்மத் கமர் ஸாஹிப், பிரின்ஸிபல் ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனி ஆகியோர் தமது ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுடன் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு நல்வரவு கூறி வரவேற்றார்கள். மேலும் ஹுஸூர் அன்வர் அவர்களுடன் கைகுலுக்குவதற்கான கண்ணியத்தையும் பெற்றார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் வெளிப்புற சுவரில் பதிக்கப்பட்டிருந்த நினைவுப் பலகையின் திரையை அகற்றி திறந்து வைத்தார்கள். மேலும் துஆ செய்து வைத்தார்கள். அதன் பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் கட்டிடத்தை ஆய்வு செய்தார்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் ஜாமிஆ ஹாஸ்டலையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். ஹாஸ்டலின் ஒரு பக்கம் ஹாஸ்டலுடைய ஸுப்ரன்டென்ட் அலுவலகம் மற்றும் குடியிருப்புப் பகுதி இருக்கின்றது. மேலும் அத்துடன் அடுத்த பகுதியில் சிங்கிள் ஆசிரியர்களின் குடியிருப்பு அபார்ட்மென்ட் இருக்கின்றது. அதன் பிறகு மாணவர்களின் குடியிருப்புப் பகுதி உள்ளது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) ஹாஸ்டலுடைய பல்வேறு அறைகளுக்கு சென்றார்கள். மேலும் ஒவ்வொரு அறையிலும் இடம் பெற்றிருந்த அடிப்படை தேவைகளுக்கான பொருட்களை ஆய்வு செய்து பார்த்தார்கள். மேலும் அத்துடன் உரிய வழிகாட்டல்களையும் வழங்கினார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) ஹாஸ்டலுடைய வெளிப்புற ஏணிகளின் மூலம் இரண்டாம் அடுக்கிற்கு செல்ல முற்பட்டபோது, ஜாமிஆவின் வளாகத்துடன் இணைந்திருந்த ஒரு கட்டிடத்தை குறிப்பிட்டு, இந்தக் கட்டிடம் விற்பனைக்கு உள்ளது என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் பணிவுடன் கூறினார்கள். இங்கிருந்து அந்தக் கட்டிடத்தை முற்றிலும் முன்னால் காண முடிந்தது.

அதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அந்தக் கட்டிடத்தை வாங்குவதற்கு ஒப்புதல் நல்கினார்கள்.

ஹாஸ்டலுடைய இரண்டாம் தளத்திலும் மாணவர்களின் குடியிருப்பு அபார்ட்மென்ட்ஸ் தவிர ஒரு பகுதியில் குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கும் அபார்ட்மென்ட்ஸ் கட்டப்பட்டிருந்தன. ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அந்த அபார்ட்மென்ட்ஸையும் ஆய்வு செய்தார்கள்.

அதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சமையலறை, ஸ்டோர் மற்றும் டைனிங் ஹால் ஆகியவற்றையும் ஆய்வு செய்தார்கள். அதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜாமிஆவின் வகுப்பறைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். வகுப்பறைகள், செக்யூரிட்டி ரூம் மற்றும் நிஸாப் செக்ஷன் ஆகியவற்றை ஆய்வு செய்த பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கம்ப்யூட்டர் அறைக்கு சென்றார்கள். இது ஒரு ஹாலைப் போன்ற பெரிய அறையாகும். அதில் அதிக எண்ணிக்கையில் கம்ப்யூட்டர்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கம் சுவருடன் வெறுமையான பகுதி இருக்கின்றது. ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், இந்த வெறுமையான பகுதியிலும் கம்ப்யூட்டர்களை வைத்து விடுங்கள் என்று கூறினார்கள்.

இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆய்விற்காக சென்று விட்டார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகவும் விரிவாக நூலகத்தை ஆய்வு செய்தார்கள். மேலும் நூல்களை பரிசோதித்துப் பார்த்தார்கள். ஜமாஅத்தின் சார்பாக செய்யப்பட்ட ஹதீஸ் நூல்களுடைய மொழியாக்கங்கள் நூலகங்களில் இருந்தன. ஆனால் அஹ்மதி அல்லாதோர் சார்பாக வெளியான மொழியாக்கங்கள் இடம்பெற்றிருக்கவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் ஸஹீஹ் புகாரீயின் மொழியாக்கத்தையும் வையுங்கள். மேலும் ஹதீஸுடைய மற்ற நூல்களின் மொழியாக்கத்தையும் வையுங்கள் என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

**ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் புதிய கட்டடத்தின் திறப்பு விழா**

இதன் பிறகு நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் திறப்பு விழா நிகழ்ச்சிக்காக ஹாலிற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அன்வர் அவர்களின் வருகைக்கு முன்னதாக அனைத்து விருந்தினர்களும், மாணவர்களும் தத்தமது இருக்கைகளில் அமர்ந்து விட்டிருந்தனர்.

இந்த திறப்பு விழா நிகழ்ச்சியானது திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர் அன்பிற்குரிய கமால் அஹ்மத் ஸாஹிப் திலாவத் செய்தார்கள். இதன் பிறகு அதன் மொழியாக்கத்தையும், ஜெர்மன் மொழியாக்கத்தையும் எடுத்துரைத்தார்கள்.

அதன் பிறகு தர்ஜா ஊலா வகுப்பு மாணவர் அன்பிற்குரிய முர்தஸா மன்னான் ஸாஹிப் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய ஹம்தோ ஸனா உஸிகோ ஜோ ஸாத் ஜாவே தானி என்ற கவிதை வரியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வரிகளை அழகிய குரலில் பாடிக் காட்டினார்கள். இதன் பிறகு இந்தக் கவிதைகளின் ஜெர்மன் மொழியாக்கத்தையும் வாசித்துக் காட்டினார்.

இதன் பிறகு மதிப்பிற்குரிய அமீர் ஸாஹிப் ஜெர்மனி ஜாமிஆ அஹ்மதிய்யா நிறுவப்பட்டது தொடர்பான தமது அறிமுக உரையை நிகழ்த்தினார்கள்.

அமீர் ஸாஹிப் ஜெர்மனி அவர்கள் தமது உரையின் துவக்கத்தில் காதியானில் மதரஸா அஹ்மதிய்யா நிறுவப்பட்டது முதல் பல்வேறு நாடுகளில் ஜாமிஆ அஹ்மதிய்யா நிறுவப்பட்டது வரையிலான சுருக்கமான குறிப்பை எடுத்துரைத்தார்கள்.

அமீர் ஸாஹிப் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது கிலாஃபத்தின் முதல் சுற்றுப் பயணத்தில் ஜெர்மனிக்கு வருகை தந்தபோது, 2008-க்குள் ஜெர்மனியிலும் ஒரு ஜாமிஆவைக் கட்டுங்கள்; அப்போதுதான் ஜெர்மனி மற்றும் ஐரோப்பாவின் மற்ற நாடுகளுடைய இளைஞர்கள் இங்கிருந்து கல்வி பயின்று முபல்லிஃக்குடைய பொறுப்புகளை நிறைவேற்ற முடியும் என்று கூறியிருந்தார்கள்.

ஏப்ரல் 17, 2007-ம் ஆண்டு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் முன்னர் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் ஆசிரியராக தொண்டாற்றிக் கொண்டு இருந்த ஷம்ஷாத் அஹ்மத் கமர் ஸாஹிப் அவர்களிடம் ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் பொறுப்புகளை ஒப்படைத்தார்கள். மேலும், தற்போது முறையான ஜாமிஆவை துவங்குவதற்கான திட்டங்களை தீட்டுங்கள் என்று கூறினார்கள். அந்நேரத்தில் ஜாமிஆவிற்கு என்று தனியாக எந்தக் கட்டடமும் இருக்கவில்லை. எனவே ஜமாஅத்துடைய தலைமையக சென்டரில் பைத்துஸ் ஸுபூஹில் (ஃபிராங்ஃபர்ட்டில்) ஒரு பகுதியை தேர்ந்தெடுத்து ஜாமிஆ அஹ்திய்யாவை நிறுவுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. 2008-ம் ஆண்டு ஆகஸ்ட் 20-ம் நாள் ஜெர்மனி ஜமாஅத்தின் வரலாற்றில் ஒரு முக்கியமான மற்றும் பொன் நாளாக இருந்தது. அந்த நாளில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியை திறந்து வைத்தார்கள். மேலும், இவ்வாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப ஜெர்மனி ஜாமிஆ அஹ்மதிய்யா முறையாக துவங்கப்பட்டது.

அமீர் ஸாஹிப் கூறினார்கள்:

அத்துடன் ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு தனது நிரந்தரமான கட்டடத்திற்கான முயற்சியும் நடைபெற்று வந்தது. அல்லாஹ்வின் அருளினால் நமக்கு Riedstadt நகரத்தின் பகுதியில் மஸ்ஜித் பைத்துல் அஃலீமுடன் இணைந்திருக்கின்ற வளாகத்தின் நிலத்தை வாங்குவதற்கு நற்பேறு கிடைத்து விட்டது. மேலும் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் டிசம்பர் 15, 2009-ம் ஆண்டு அந்தப் பகுதியில் தமது அருளுக்குரிய கரத்தால் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். ஜாமிஆ வின் பாடத்திட்டம் 7 ஆண்டுகளை உள்ளடக்கியுள்ளது. தற்போது இங்கு மாணவர்கள் ஐந்தாம் வருடத்தை அடைந்து விட்டார்கள். தற்போது மாணவர்களின் எண்ணிக்கை 80 ஆகும். மேலும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 12 ஆகும்.


Proprietor off : 044- 2260 1886

**RAZIK XEROX & TELECOM**

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 03 OCTOBER 2024 Issue No.40

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இந்தக் கட்டிடத்தில் இஸ்லாமியக் கல்வி பயின்று வரும் மாணவர்கள் ஜெர்மனியின் ஒரு அங்கமாவார்கள். இன்னும் கூறப்போனால் மிகவும் முக்கியமான அங்கமாவார்கள். ஏனெனில், அவர்கள் தங்களது முந்தைய தலைமுறைகளைக் காட்டிலும் தொடர்புகளுக்கான எப்படிப்பட்ட பாலத்தை கட்டுவார்கள் என்றால், அவர்கள் மார்க்கம் மற்றும் கலாச்சாரத்திற்கிடையிலான கதவுகளை திறக்கக் கூடியவர்களாக இருப்பர். அந்த இளைஞர்கள் ஜெர்மனியில் முஸ்லிம்களுக்கு அமைதி நிறைந்த இஸ்லாமியப் போதனைகளை வழங்குவர். மேலும் இதேபோன்று இஸ்லாத்தின் தவறான சித்திரத்தை முன் வைக்கக் கூடியவர்கள் மற்றும் தீவிரவாதம் மற்றும் வன்முறையை விரும்பக் கூடிய மக்களிடமிருந்து அவர்களை பாதுகாப்பார்கள். அவர்கள் இதே சமூகத்தின் ஓர் அங்கத்தினர் ஆவர். மேலும் இதனால் அவர்கள் இஸ்லாத்தை எப்படிப்பட்ட வடிவில் முன் வைப்பார்கள் என்றால் அதனால் தவறான எண்ணங்கள் நீங்கி விடும். மேலும் இவை அனைத்தையும் அவர்கள் தங்களது மொழியிலேயே அதாவது ஜெர்மனில் எடுத்துரைப்பார்கள்.

**(தொடரும்..........)**

( நன்றி - அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் பத்திரிகை - பிப்ரவரி 22 - 28, 2013)

தமிழாக்கம்
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி (மல்ஃபூஸாத்)..........**

ஏசிபேசுகின்றனரோ மேலும் எம்மை தஜ்ஜால் என்றும் காஃபிர் என்றும் கூறுகின்றனரோ நாம் அவர்களை சற்றும் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில், அல்லாஹ் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒளிமயமான இயல்பையும், முடிவெடுப்பதற்கான ஆற்றலையும் வழங்கியிருக்கின்றான்.

நான் இறைவன் புறமிருந்து தோன்றாமல் இருந்திருந்தால் மேலும் அவன் என்னை நியமிக்காமல் இருந்திருந்தால் பின்னர் நீங்களே கூறுங்கள்: இந்த அளவிற்கு ஏச்சுப் பேச்சுக்களும், கூச்சலும், தீங்கும், எதிர்ப்பும் எந்த அளவுக்கென்றால், கொலை செய்வதற்கான ஃபத்வா, எனக்கு எதிராக ஜோடிக்கப்பட்ட கொலை வழக்கு போன்ற துன்பங்களையும், துயரங்களையும் நான் என் மீது சுமப்பதற்கு என்ன அவசியம் இருக்கின்றது? மேலும் இது போன்ற அசுத்தங்கள் நிறைந்த பிரசுரங்கள் மற்றும் ஏச்சுப் பேச்சுகளால் நிறைந்த கடிதங்கள் அனுப்பப்படுவதை ஒருபோதும் எவரும் பொறுத்துக் கொள்ள மாட்டார். ஆனால், நான் உண்மையாக கூறுகின்றேன்; இது எனது அதிகாரத்திற்கு உட்பட்ட விஷயம் அல்ல. மேலும் இறைவன் தான் நாடியதை செய்கின்றான். அவன் சுயமே இந்த அமைப்பிற்கு அடித்தளம் அமைத்துள்ளான். அவனே எனக்கு ஆற்றல் நிறைந்த இதயத்தை வழங்கியுள்ளான். அதாவது இந்த அனைத்து வேதனைகளுக்கும், கஷ்டங்களுக்கும் எனது பார்வையில் சிறிதளவும் உண்மைத்துவம் பெற்றிருக்கவில்லை.

எனவே நீங்கள் சுயமே சிந்தித்து பாருங்கள்; இந்த பொலிவும், இந்த ஆற்றலும், இந்த உறுதிப்பாடும் ஒரு பொய்யருக்கு கிடைக்க முடியுமா? ஒருவர் பொய்யராக இருந்து அவருக்கு இப்படிப்பட்ட ஆற்றல் கிடைக்கும் என்பதை ஒருபோதும் என்னால் நம்ப முடியாது. எந்த நபர் கொலை செய்கின்றாரோ அவரை உண்மையே குற்றவாளி ஆக்கிவிடுகின்றது. இறுதியில் அவரே நீதிமன்றத்திற்கு சென்று குற்றத்தை ஒப்புக் கொண்டு விடுகின்றார். இதில் உள்ள இரகசியம் இதுவே ஆகும். அதாவது, ஓர் உண்மையாளருக்கு வழங்கப்படும் ஆற்றல் அவரிடத்தில் இருப்பதில்லை. பொய் மனிதனை கோழையாகவும், பலவீனனாகவும் ஆக்கிவிடுகின்றது. எனவே வாதியின் உறுதிப்பாட்டை பார்ப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம் ஆகும்

.(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 35, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி (தஃப்ஸீரே கபீர்)......**

ஒட்டகத்தையோ அல்லது மாட்டையோ குர்பானி செய்கின்றாரோ, அவர் அல்லாஹ்வை அடைந்து விட்டதாக கருதுகின்றார் என்றால் அவர் தவறிழைக்கின்றார். இது ஒரு விஷயமே கிடையாது; அதாவது சுயமே விலங்கை பலிகொடுத்தும், சுயமே உண்டு விடுவதும் ஒரு விஷயமே கிடையாது; இதனால் அல்லாஹ்விற்கு என்ன? என்பதை அல்லாஹ் தெளிவாக கூறுகின்றான். இது ஒரு உருவக மொழியில் ஓர் உண்மைத்துவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதனுள் மிகவும் ஆழமான ஞானம் மறைவாக இருக்கின்றது. உதாரணமாக, ஓவியர் எப்போதும் சித்திரம் வரைகின்றார்; ஆனால், அவர்களின் நோக்கம் வெறும் சித்திரம் வரைவதில்லை. மாறாக, அவற்றின் மூலமாக சமுதாயத்தின் முன்னால் சில முக்கியமான கருத்துகளை வைப்பதாக இருக்கின்றது.

எனவே சிலநேரம் அவர் சங்கிலிகளை வரைகின்றார். அதன் பொருள் சமுதாய ஒற்றுமை என்பதாக இருக்கின்றது. சிலநேரம் சூரிய உதயத்தின் காட்சியை வரைகின்றார். மேலும் அதன் பொருள் சமுதாயத்தின் முன்னேற்றம் என்பதாக இருக்கின்றது. இதே போன்று வெளிப்படையான குர்பானியும் ஒரு சித்திர மொழியாக இருக்கின்றது. அதன் பொருள் இதுவாகும். அதாவது விலங்கை பலியிடக் கூடிய நபர் தனது உயிரையும் (இறை வழியில்) அர்ப்பணிப்பதற்கு தயாராக இருக்கின்றார் என்பதாகும். ஆக எந்த நபர் குர்பானி கொடுக்கின்றாரோ அவர் இந்த விஷயத்தை ஒருவகையில் வெளிப்படுத்துகின்றார். அதாவது, நான் இறைவழியில் எல்லாவற்றையும் தியாகம் செய்து விடுவேன். எந்த நபர் ஆட்டை குர்பானி செய்வதுடன் தனது நஃப்ஸையும் குர்பானி செய்கின்றாரோ அவர் கண்ணியம் மிக்க நபர்களின் பார்வையில் கண்ணியத்திற்குரியவர் ஆவார்.

இந்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். அதாவது அல்லாஹ்வை உங்களது குர்பானிகளின் இறைச்சியும் சென்றடைவதில்லை ; அவற்றின் இரத்தமும் சென்றடைவதில்லை. மாறாக இறையச்சத்தை கருத்தில் கொண்டவாறு நீங்கள் வைத்த நல்ல எண்ணம் எல்லாம் வல்ல இறைவனை சென்றடைகின்றது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 57, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * *

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad